பக்கங்கள் 20

20/=

Registered as a Newspaper in Srilanka

எதிரொலி

Ethiroli

31 ஒக்ரோபர் - 06 நவம்பர் 2018

வாரஇதழ்

Raja Bojun

Sri Lankan Buffet

Liberty Arcade,
No 282, R.A.De Mel Mawatha Colombo 03.
Tel. 4 71 61 71 / 2577097-8 web : rajabojun.lk

தெறிக்கவிட்ட மைத்திரி

"ஒப்பிரேஷன் விக்னேஸ்வரன்" கூட்டமைப்புக்கு குலைப்பன்

சம்பந்தன் என்ன செய்ய வேண்டும்?

"ஒப்பிரேஷன் விக்னேஸ்வரன்" கூட்டமைப்புக்கு குலைப்பன்

■ ஒளண்யன்

எதிர் நாயகத் தன்மை கொண்ட அநேக (இரட்டை வேட)திரைப்படங்களில் ஒரு பொதுவான தன்மை இருக்கும். மக்களுக்கு நல்லது செய்யும் நாயகனை வீழ்த்த, அவனுக்கு கெட்ட பெயரை உண்டாக்க, அவனைப் போல அல்லது அவனது குணாதியசங்களைக் கொண்ட இன்னொருவனை வில்லன் கும்பல் களத்தில் இறக்கும். அப்படித் தம்மால் களமிறக்கப்பட்டவனை வைத்துக்கொண்டு நாயகன் பற்றிய விம்பங்களை மக்கள் மனதில் இருந்து அகற்றுவதோடு, தாம் நினைத்ததை முடிக்கலாம் என வில்லன் கும்பல் கனவு காணும். ஆனால், அவர்களின் கைப்பொம்மையாகக் களமிறக்கப்பட்ட எதிர்நாயகன் மக்களின் பிரச்சினைகளை அனுபவரீதியாக உணர்வதன் மூலம், தானும் நாயகனின் கொள்கைக்கு மாறி கடைசியில் வில்லன் கும்பலுக்கு ஆப்பு வைப்பதோடு'சுபம்' போடப்படுவது எம்.ஜி.ஆர் காலத்தில் இருந்து இப்போதைய விஜய் வரையான திரைக் கதைகளில் மாறாமல் பின்பற்றப்படுகின்றது.

குமாரே வலிய வந்து, வெளியேறப் போவதாகமிரட்ட, அதைத் தமிழரசுக் கட்சி சாதகமாகப் பயன்படுத்தியது. இறுதியில் கஜேந்திரகுமார் வெளியேற, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் இன்னொரு முக்கிய புள்ளியான அப்பாத்துரை விநாயகமூர்த்தி அந்த இடத்துக்குக் கொண்டு வரப்பட்டார். தாங்கள் சொல்வதற்கெல்லாம் அப்பாத்துரை விநாயகமூர்த்தி 'ஆமாம் சாமி' போடுவார் என்பதாலேயே இந்த முடிவு. கூடவே புளொட் அமைப்பும் கூட்டமைப்புக்குள் உள்வாங்கப்பட்டது.

ஏறக்குறைய இப்படியான ஒரு திரைப்பிரதியைத் தான் தமிழ் மக்கள் கடந்த 5 வருடங்களாகக் கண் முன்னே கண்டுகளித்திருந்தார்கள். விடுதலைப் புலிகளால், தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்காக உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் 2009 ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எப். , அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ரெலோ ஆகிய கட்சிகள் இருந்தன. (ஆனந்த சங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி இக்காலத்தில் கூட்டமைப்பில் இருந்து விலக்கப்பட்டிருந்தது) இவையாவும் வெவ்வேறான பயணங்களையும், கொள்கைகளையும் கொண்ட கட்சிகள். இருப்பினும் புலிகள் அவற்றை ஒரே பாதையில் பயணிக்க வைத்திருந்தனர். புலிகளுக்கு முன்னால் தங்கள் சுயரூபத்தைக் காட்டமுடியாமல், பல்லைக் கடித்துக் கொண்டு ஒன்றாயிருந்த இந்தக் கட்சிகள், புலிகளின் அழிவுக்குப் பின்னர் மெதுவாகத் தங்கள் உண்மை முகத்தைக் காட்டின. குழி பறிப்புகள் தொடங்கின. குறிப்பாகத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பில்சகலகட்சிகளுக்கும் புலிகளின் காலத்தின் சம அந்தஸ்தே வழங்கப் பட்டிருந்தது. ஆனால் 2009க்குப் பின்னர் கூட்டமைப்பின் தலைமைப் பாத்திரத்தை தமிழரசுக் கட்சி வலிந்து சுவீகரித்தது. தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்திலேயே கூட்டமைப்பு தேர்தலைஎதிர்கொண்டதால், இந்தத் தலைமைத்துவத்தை அந்தக் கட்சியால் இலகுவாக அடைய முடிந்தது.

தன்னுடைய தலைமைத்துவத்துவத்துக்கு தடையாக இருந்தவர்களை அகற்றும் பணியையும், புலி நீக்க அரசியலையும் தமிழரசுக் கட்சி முன்னெடுத்தது. எந்தக் கட்சியிலும் அங்கத்துவம் இல்லாமல் புலிகளால் நேரடியாகக் கூட்டமைப்பில் இணைக்கப்பட்டிருந்த செல்வராஜா கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன் ஆகிய இருவருக்கும் 2010 ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் எவ்விதக் காரணங்களுமின்றிப் போட்டியிட அனுமதி மறுத்தது தமிழரசுக் கட்சி. இத்தனைக்கும் 2004 ஆம் ஆண்டுத் தேர்தலில் கஜேந்திரனும், பத்மினியும் அதிகளவான வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றுக்குத் தெரிவானவர்கள். அவர்களுக்கு ஏன் போட்டியிட அனுமதி மறுக்கப்பட்டது என்பது குறித்து எவ்வித விளக்கங்களையும், தன் சார்ந்த நியாயப்பாட்டையும் இதுவரை கூட்டமைப்பு அல்லது தமிழரசுக் கட்சி மக்களுக்குத் தெளிவுபடுத்தவே இல்லை. இந்த நிலையில் தான், கஜேந்திரனுக்கும், பத்மினிக்கும் போட்டியிடச் சந்தர்ப்பம் வழங்காவிட்டால் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி, கூட்டமைப்பில் இருந்து வெளியேறும் என அதன் தலைவரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போர்க்கொடி தூக்கினார். இது தமிழரசுக் கட்சிக்குப் பழம் நழுவிப் பாலில் விழுந்ததைப் போலிருந்தது. ஏனெனில் அடுத்ததாக கஜேந்திரகுமாரையே கட்டம் கட்டுவதாகத்திட்டமிட்டிருந்தது. இப்போது கஜேந்திரகுமாரே வலிய வந்து, வெளியேறப் போவதாகமிரட்ட, அதைத் தமிழரசுக் கட்சி சாதகமாகப் பயன்படுத்தியது. இறுதியில் கஜேந்திரகுமார் வெளியேற, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் இன்னொரு முக்கிய புள்ளியான அப்பாத்துரை விநாயகமூர்த்தி அந்த இடத்துக்குக் கொண்டு வரப்பட்டார். தாங்கள் சொல்வதற்கெல்லாம் அப்பாத்துரை விநாயகமூர்த்தி 'ஆமாம் சாமி' போடுவார் என்பதாலேயே இந்த முடிவு. கூடவே புளொட் அமைப்பும் கூட்டமைப்புக்குள் உள்வாங்கப்பட்டது.

இப்படியாக கூட்டமைப்பில் புலிநீக்க அரசியல் வெற்றிகரமாக கூட்டமைப்புக்குள் நிகழ்த்தப்பட்டாலும், புலிகளால் உருவாக்கப்பட்ட கட்டமைப்பு என்பதால், வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்தல் என்பதே மக்களுக்குப் பழகிப் போயிருந்தது. இது கூட்டமைப்பினருக்கு அதிகப்படியான தெம்பைக் கொடுத்தது. அந்தத் தெம்பு எந்தளவுக்குச் சென்றதென்றால், '" நாங்கள் என்னதான் செய்தாலும், செய்யாவிட்டாலும் ஒரு தும்புத்தடியை வீட்டுச் சின்னத்தில் போட்டியிட வைத்தாலும் வாக்குகள் விழும்" என்ற நிலை கூட்டமைப்பினரிடையே வேரூன்றச் செய்தது.

இந்தச் சூழமைவில்தான் வடக்கு மாகாணசபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பு வந்த வுடனேயே கூட்டமைப்புத்தான் வடக்கு மாகாண சபையைக் கைப்பற்றும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகி விட்டது. ஆனால் முதலமைச்சர் யார்? இதுதான் கூட்டமைப்புக்குள் இருந்த கேள்வி. அப்போது தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளராக இருந்த நாடாளுமன்ற உறுப்பினரான மாவை.சேனாதிராசாவே அந்தப் பாதவிக்குப் பொருத்தமானவர் என்பது கூட்டமைப்பில் இருந்த

> **புலிகளால் உருவாக்கப்பட்ட கட்டமைப்பு என்பதால், வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்தல் என்பதே மக்களுக்குப் பழகிப் போயிருந்தது. இது கூட்டமைப் பினருக்கு அதிகப்படியான தெம்பைக் கொடுத்தது. அந்தத் தெம்பு எந்தளவுக்குச் சென்ற தென்றால், '" நாங்கள் என்னதான் செய்தாலும், செய்யாவிட்டாலும் ஒரு தும்புத்தடியை வீட்டுச் சின்னத்தில் போட்டியிட வைத்தாலும் வாக்குகள் விழும்" என்ற நிலை கூட்டமைப்பினரி டையே வேரூன்றச் செய்தது.**

பெரும்பான்மையினரது கருத்தாக இருந்தது. முதலமைச்சர் பதவி மீது மாவைக்கும் பெருவிருப்பு இருந்தது. என்னதான் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தாலும் கிடைக்காத செல்வாக்கு, முதலமைச்சர் பதவி மூலம் கிடைக்கும் என்பது அவர் கணிப்பு. இந்தக் கணிப்பு அவருக்கு மட்டுமல்ல எம்.ஏ. சுமந்திரனுக்கும் தெரிந்திருந்தது.

" மாவை முதலமைச்சர் பதவியில் குந்திவிட்டால், தமிழரசுக் கட்சியிலும், கூட்டமைப்பிலும் மக்கள் செல்வாக்குள்ள, தீர்மானிக்கும் சக்தியாக மாவை மாறிவிடுவார். (16 ஆம் பக்கம் பார்க்க)

எதிரொலி
Ethiroli

அம்பலம் பதிப்பகம்,
இல. 241, கைதடி – மானிப்பாய் வீதி,
உருவில், யாழ்ப்பாணம்.
ethirolimedia@gmail.com, 0212243818

கூட்டமைப்பின் கையில் தலைவிதி

ஒக்ரோபர் 26, இலங்கையின் 'பெரிய வெள்ளியாக' மாறிப்போனது. ஒரே இரவில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த, பிரதமர் பதவிக்கு மைத்திரியால் கொண்டு வரப்பட்டிருக்கிறார். ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த வின் முதுகில் குத்தியதைப் போல, இப்போது அதே விளையாட்டை ரணிலுக்கும் காட்டியிருக்கிறார் மைத் திரி. இப்படி ஒரே இரவில் ஆட்சிப் பொறுப்பை மஹிந் தவிடம் மைத்திரி தூக்கிக் கொடுப்பதற்கு முக்கிய காரணம் அரசியல் சூழமைவுகளின் அழுத்தங்களே.

நல்லாட்சி அரசு வரும்போது, ஏகப்பட்ட 'பில்டப் புகள்' கொடுக்கப்பட்டிருந்தன. ஆனால் போகப் போக எதுவுமே செய்ய முடியாத, ஊழலில் மாத்திரம் புரண்டு சொகுசு காணக்கூடிய நோஞ்சான் அரசாக அது மாறிப் போனது. மஹிந்த ஆட்சியை விடவும் நல்லாட்சியில் நிலவிய கையாலாகாத்தனம், அரசு மீதான அதீத வெறுப்பை மக்களிடம் உண்டு பண்ணியது. இப்படி நல்லாட்சியை எதுவுமே இல்லாத ஒன்றாக மாற்று வதில் மஹிந்த தரப்பின் பங்கும் அதிகம். இப்படிப்பட்ட நிலையில் உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் மீண்டும் மஹிந்தவின் எழுச்சியை மைத்திரிக்கு உணர்த்தின.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் , நாடாளுமன்றத் தேர்தலிலும் மஹிந்த அணியிடமே வெற்றி செல்லும் என்பதை உள்ளூட்சித் தேர்தல் முடிவுகள் அப் பட்டமாகச் சொல்லியிருந்தன. அப்படி ஓர் ஆட்சி மாற்றம் நிகழ்ந்து, மீண்டும் மஹிந்த தரப்பிடம் அதி காரம் போனால், முதல் பலியாடு மைத்திரியாகத் தான் இருப்பார். இறுதிப்போரில் வெற்றியை ஈட்டிக் கொடுத் ததால், மஹிந்தவால் தலைக்கு மேல் வைத்துக் கொண்டாடப்பட்டு, பின்னர் தன்னை எதிர்த்து ஜனாதி பதித் தேர்தலில் நின்றதால், சிறைப்பறவையாக மாற்றப்பட்டிருந்தார் சரத் பொன்சேகா. பொன்சேகா வுக்கே இந்தக் கதி என்றால் மைத்திரி அதை விடவும் அதிகமாகப் பழிவாங்கப்பட்டிருப்பார். ஆக, அடுத்த ஆட் சிக்கு முன்னதாக ஏதாவது செய்து, தன்னுடைய தலை யைத் தக்க வைக்க வேண்டிய நிலை மைத்திரிக்கு. அதைவிட உட்கட்சிச் சண்டைகள், ஆட்சியில் குழப் பங்கள், மக்கள் எதிர்ப்பு அதிகரிப்பு, பொருளாதாரச் சரிவு, டொலரின் பெறுமதி உயர்வு என எந்தப் பக்கம் திரும்பினாலும் இடியாக விழுந்து கொண்டிருந்தன. இத்தனை பிரச்சினைகளுக்கும் மஹிந்தவை மீண்டும் பிரதமராக்குவதே சர்வரோக நிவாரணியாக மைத்திரிக் குத் தென்பட்டது. அதனால்தான் இந்த அதிரடி முடிவு.

இப்போது ஆட்சியைத் தன்னிடம் வழங்கியதால், மைத்திரி மீதிருந்த கடுப்பில் கணிசமானளவு மஹிந்த வுக்கு குறைந்திருக்கும். எனவே மைத்திரி மீதான பழி வாங்கல் எதுவும் இல்லாமல், அவர் இந்தப் பதவிக் காலத்தின் பின்னர் நிம்மதியாக வீட்டில் இருக்கலாம். ஆனால் நாடுதான் குழப்பத்தில் இருக்கும். என்னதான் இரவுநேரத்தில் களவாகப் பிரதமர் ஆனாலும், அதனை நாடாளுமன்றில் நிரூபிக்க வேண்டிய கட்டாயம் மஹிந் தவுக்கு. இப்போது வரை அதிகளவான நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணில் பக்கம் தான். ஐ.தே.க வில் இருந்து ஆசை காட்டி, தன் பக்கம் இழுத்தால் அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைப் பெற்றுக் கொண்டால் மாத்திரமே மஹிந்தவால் தொடர்ந்தும் பிரதமராக நீடிக்க முடியும்.

ரணில் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்ட போது, நிபந்தனைகளின் அடிப் படையில் கூட்டமைப்பு ஆதரவு வழங்கியிருந்தது. ஆனால் அப்போது என்ன நிபந்தனைகளைக் கூட்ட மைப்பு விதித்தது என்பது இன்னும் கன்னித்தீவு மர்ம மாகவே நீடிக்கிறது. அதை விடுத்து தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை முன் வைத்து பேரம் பேசக்கூடிய இரண்டாவது சந்தர்ப்பத்தையும் காலம் கூட்டமைப்பின் கைகளில் கொடுத்துள்ளது. அடுத்து வரும் நாட்களில் இந்தச் சந்தர்ப்பத்தைக் கூட்டமைப்பு எப்படிப் பயன்படுத்தப்போகின்றது என்பதைப் பொறுத்தே தமிழர்களின் அடுத்த சில வருடங்களுக்கான தலைவிதி அமையப்போகின்றது.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

■ ப.தெய்வீகன்

சம்பந்தர் என்ன செய்ய வேண்டும்?

தென்னிலங்கை ஆட்சிக் கதிரையின் ஒரு கால் அல்ல, இரண்டு கால்களாகவும் சம் பந்தன் இருந்துகொண்டிருக்கிறார் என் பதை தற்போதைய குழப்பங்கள் அடை யாளப்படுத்தியுள்ளன. இனி சம்பந்தர் என்ன செய்யப்போகிறார் என்பதுதான் இப்போது ஒவ்வொருவரிடமும் உள்ள 'திக் திக்' கேள்வி. சமூக வலைத்தளங்கள் முதல் ஊடகங்களின் ஆசிரியர் தலையங்கங்கள்வரை எல்லாமே, சம்பந்தர் பல மோடு இருக்கிறார் என்று சொல்கின்றன. அவ்வாறு சொல்வது மிக எளிதானதும்கூட. ஆனால், அவர் என்ன செய்யவேண்டும் என்று சொல்வதுதான் கடி னம். அதனை எவருமே சொன்னதாகக் காணவில்லை.

தற்போதைய அரசியல் குழப்பமானது எவ்வாறு ஏற்பட்டது? யாரெல்லாம் இதன் பின்னணியில் நிற்கிறார்கள் என்று "டோர்ச்" அடித்துப் பார்ப்பதை விடுத்து - இங்கு ஆளுக்காள் நடைபெறுகின்ற தலைமைத்துவ போட்டியில், தங்கள் ஆளுமையை நிலைநிறுத்தபவர்கள் யார் என்பதைப்பொறுத்துத் தான் அவர்களுக்கான ஆதரவும் நிலைநாட்டப் படவுள்ளது என்பதை முதலில் உணரவேண்டும். மகிந்த என்பவரது மீள்வரவை இன்று தமிழ் மக்களில் பலர் வாயாரப்புகழ்ந்துகொண்டிருப்பதற்கான காரண மும்கூட அதுதான்.

ஆக,இன்று மைத்திரியால் குதறி எறியப்பட் டிருக்கும் ரணில் விக்கிரமசிங்க என்பவர் எப்படிப் பட்ட அணுகுமுறையோடு தற்போதைய பிரச்சி னையைப் பார்க்கிறார் என்று நோக்கினால், இந்தப் பரிதாபம் புரியும்.

ரணில் தற்போதைய குழப்பங்களை ஊரில் உள்ள கிழவிகள் போல தெருவில் வந்து நின்றுகொண்டு ஒப்பாரி வைக்கிறார். தன்னோடு நிற்பவர்களை அழைத்துக்கொண்டுவந்து ஊடகவியாலாளர்களிடம் புலம்புகிறார். வெளிநாட்டு தூதுவர்களை அழைத்து வந்து "பார்த்தீர்களா இவர்கள் செய்திருக்கும் அநி யாயத்தை" - என்று சீரியல் மாமியார் கணக்காக மூக்கை சிந்திக்கொண்டிருக்கிறார்.

இதுவா ஒரு தலைவனுக்கு அழகு? இதுவா இவ் வளவு காலமும் அரசியலில் உள்ள ஒரு கட்சியின் ஆளு மையின் சீத்துவம்? ஐந்து லட்சம் விருப்பு வாக்குகளை போட்டு வரலாறு காணாத பெருவெற்றியை ரணி லுக்கு கொடுத்த ஒவ்வொருவரும் வெட்கப்படவேண் டிய ஒரு மனிதராக ரணில் இன்று அழுகுணியாட்டம் போடுகிறார்.

உண்மையில் இவர் செய்திருக்கவேண்டியது என்ன? எதிரி தனக்கு எதிராகப் போட்ட வலையை அவன் எதிர்பாராத திசையில் கிழித்திருக்கவேண்டும். எதிரி தனக்குப்போட்ட தடத்தினை அவனுக்கே திருப்பி எறிந்திருக்கவேண்டும். அதற்கு என்ன வழி?

ரணிலும் அவரது கட்சியும் இவ்வளவு காலமும் பலம்பொருந்திய தரப்பினராக இருப்பதற்கு காரண மான மக்களிடம் ரணில் போயிருக்கவேண்டும். தனக்கு நேர்ந்த இந்த அநியாயத்தை பெரும் கூட்டம்போட்டு அறிவித்துவிட்டு, தமது கட்சி உறுப்பினர்கள் அனை வரும் நாடாளுமன்றப் பதவிகளை ராஜினாமா செய் வதாக அறிவித்திருக்கவேண்டும். "தேர்தலை நடத்தி மக்களிடம் நியாயம் கேட்போம். அவர்கள் வழங்கும் தீர்ப்பின்படி நடப்போம்" - என்று கூறியிருக்கவேண் டும். உடனடியாக அதனை செய்திருந்தால் மகிந்தவோ - மைத்திரியோ அடுத்த கட்டத்தைப்பற்றி யோசிப் பதற்கோ-சுதாகரிப்பதற்கோநேரம்கிடைத்திருக்காது. நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டுத் தங்களின் அடுத்த கட்டத்தை முன்னெடுப்பதற்கும் - ஆட்களை வாங்கு வதற்கு காலத்தை எடுத்துக்கொள்வதற்கும் .- நேரம் கிடைத்திருக்காது.

அதுதான் ஜனநாயகத்துக்கு ஏற்பட்ட பேரடிக் கான பதிலடி. மக்களும் தங்களது பொறுப்பை உணர் வதற்கு வழங்கப்பட்டிருக்கும் பெரிய தருணமாக இருந்திருக்கும்.

ஆனால், இந்த யானைக்கூட்டம் என்ன செய் கிறது? அவர்களுக்கு பதவியும் வேணுமாம். தங்களை ஒருவரும் சுரண்டவும் கூடாதாம். சுண்டவும் கூடா தாம். எல்லோரது மண்டையிலும் நோகாமல் நொங் கொடுத்துக்கொண்டிருப்பார்களாம். இந்தக்கூத்துக் களை வெளிநாடுகள் பக்குவமாகப் பதமாக பாதுகாத்து அவர்களுக்கு கொடுக்கவேண்டுமாம். தாங்கள் ஆட்சி மாத்திரம் செய்வார்களாம்!

என்னமாதிரியான தலைமை இது?

இந்தமாதிரியான கேவலங்களை பார்த்தாவது தமிழர் தரப்பு தங்களின் நிலைப்பாட்டினை நேர்சீராக முன்னெடுக்கவேண்டும்.

சம்பந்தர் தற்போது உடனடியாக செய்யவேண் டியது தமிழர்களின் நலனில் தமது கட்சிகொண்டுள்ள கொள்கைக்கு ஒத்த போக்குடைய தரப்புக்களுடன் பேசவேண்டும். அது விக்னேஸ்வரனாகவோ கஜேந்திர குமாராகவோ சுரேஸ் தரப்பாகவோ இருக்கலாம். எல் லோரையும் அழைத்து ஒரு மேசைக்குக் கொண்டு வரவேண்டும். தமிழ்க் கட்சிகளுக்கு மத்தியில் இவ் வளவு காலமும் நடைபெற்றுவந்த போட்டிகள் - பிரிவுகள் - பிளவுகள் என்பது வேறு. இப்போதைய தேவை, தமிழர் தரப்பு ஒட்டுமொத்தமாகச் சிங்கள தரப்புக்கு எதிராக நின்று சரியான பதிலடியை கொடுக்கவேண்டும். தருணத்தைப் பயன்படுத்தவேண் டும். தேவையில்லாத - வேறு - விடயங்களை தவிர்த்து, தற்போதைய அரசியல் சூழ்நிலைக்கு எடுக்கவேண்டிய முடிவை மாத்திரம் கவனம் செலுத் தும் சந்திப்பாக அதனை மாற்றி, ஒரு உறுதியான முடிவை எடுக்கவேண்டும். இந்தச் சந்திப்பானது எவ் வளவு தூரம் காத்திரமாக அமைகிறதோ இல்லையோ, இந்த ஒரு செயற்பாடு தென்னிலங்கைக்கு ஒரு கிலிக்கலக்கத்தை நிச்சயம் கொடுக்கும். "நேற்றுவரை ஹிக்கி, பக்கி என்று பிரிந்து நின்ற எல்லோரும் சிங்க ளவர்களுக்கு எதிரான அரசியல் யுத்தம் என்றவுடன் ஒன்றாகிவிட்டார்கள் பார்த்தீர்களா" - என்று சிங்களத்துக்கு ஒரு நடுக்கம் வரும். வரவேண்டும்.

மும்மதத் தலைவர்கள் - பல்கலைக்கழக சமூக பிரதிநிதிகள் போன்ற பொது அமைப்புக்களின் பிரதி நிதிகளுடனும் சந்திப்பொன்று அமைந்தால் இன்னும் சேமம்.

இதன்பிறகு, கொழும்பில் ஊடகவியலாளர் மாநாடு ஒன்றைக் கூட்டி, சம்பந்தர் தனது முடிவை அறிவிக்கலாம். தமிழர் தரப்பின் ஆதரவானது நாடா ளுமன்றின் பெரும்பான்மையை தீர்மானிக்கும் சக்தி யாக இருக்கப்போகிறது என்பது உறுதி என்றபடியால், கதிரையை கொஞ்சம் முன்னுக்குத் தள்ளி மைக்குக்கு கிட்டவாக வந்திருந்து சம்பந்தர் திமிராகவே பேச லாம்.

(16 ஆம் பக்கம் பார்க்க)



என்ன செய்ய வேண்டும் கூட்டமைப்பு?

■ மிகன்

அரசியல் கைதிகள் விடுவிப்பு விவகாரம் முடிவின்றித் தொடர்வது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை ஓர் இராஜதந்திரத் தோல்வியாகும். இதன் விளைவுதான் எதிர்வரும் நவம்பரில் அரசு முன்வைக்க உத்தேசித்துள்ள பாதீட்டை எதிர்க்க கூட்டமைப்பு எடுத்துள்ள முடிவு. இம்முடிவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்பி எடுக்க வில்லை. மக்களின் கொதிநிலையை கருத்திற் கொண்டே இப்படியான நிலைக்குக் கூட்டமைப்புச் சென்றுள்ளது.

இம்முடிவு பற்றி பலரும் பலவிதமான விமர் சனங்களை முன்வைத்து வரும் சூழ்நிலையில், வடக்கு மாகாண முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா? "கூட்டமைப்பு பாதீட்டை எதிர்த்தால் தமிழருக்குப் பாதிப்புத்தான் வரும்" என்றொரு குண்டைத் தூக்கிப் போட்டுள்ளார்.

தமிழர் அரசியல் என்பது உணர்ச்சிபூர்வமானது. 1977 வட்டுக்கோட்டைத் தீர்மானத்திலிருந்து 2009 முள்ளிவாய்க்காலில் முடிந்துபோன ஆயுதப் போராட் டம் வரை, உணர்ச்சிபூர்வமான கருத்துக்கள், செயற் பாடுகள்தான் தமிழர் அரசியலை நகர்த்தி வந்தன. அதற்கான அரசியல் பலமும் ஆயுத பலமும் அப் போது எம்மிடம் இருந்தன. ஆனால், 2009 இன் பின்னர் நிலைமை அவ்வாறு இல்லை. புலிகளின் ஆயுத பலம் சிதைக்கப்பட்ட பின்னர், தமிழ் மக்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஓர் அர சியல் வெறுமைக்குள் தள்ளி விடப்பட்டமை எவரும் உணராத விடயம் இல்லை. இந்த நிலையில் மகிந்த ராஜபக்சவினாலும், அவரது படைகளினாலும், சொல்லொணாத்துன்பத்தை மக்கள் அனுபவித்ததை யார் இலகுவில் மறந்து விடமுடியும்? அந்தத் துன்பங்களில் இருந்து தமிழ் மக்களைக் காத்திட யார் முன் வந்தார்கள்? ஐ.நா. செயலாளர் கூட இலங்கை வந்து, மகிந்த தரப்பினரைச் சந்தித்து அவர்கள் கூறியதைக் கேட்டுச் சென்றாரே தவிர, முட்கம்பி முகாம்களுள் அடைத்து வைக்கப்பட்ட மக்களின் துன்பத்தில் தோய்ந்த முகங்களும் ஈனமான குரல்களும் அவர்கள் பார்வையிலும், செவிகளிலும் கேட்கவில்லை. இந்திய நாடாளுமன்ற உறுப் பினர்களும் வந்து போனார்கள். என்ன முடிவு தந்தார்கள்? துயரங்கள் தொடர்ந்தனவே ஒழிய மக்களின் அடிப்படைத் தேவையான பாதுகாப் புக்கு எந்த உத்தரவாதமும் இல்லை. கைதுகள் தொடர்ந்தன. காணாமல் போவோரின் எண்ணிக் கைகள் அதிகரித்தன.

இந்தச் சூழ்நிலையில் தான் கூட்டமைப்பு சில் விமர்சனத்துக்குரிய முடிவுகளை எடுத்தது. அதில் ஒன்று தமிழ் மக்களையே கொன்று குவித்த பொன் சேகாவையே ஆதரிப்பது. இது தவறான முடிவுதான். ஆனால், அந்தக் காலச் சூழ்நிலையில் அது சரியான முடிவு. ஏனெனில் கிணற்றுக்குள் மூழ்கும் ஒருவன் தும்பைப் பிடித்து ஏற முயற்சிக்கும் சூழ்நிலை யில்தான், மக்களைக் காப்பாற்ற, சிறு மூச்சுவிட இந்த முடிவை கூட்டமைப்பு எடுத்தது. அந்த முடிவில் தோற்றபோது, பொன்சேகா தோல்வியடைந்த போது தமிழ் மக்களுமே சோர்ந்து போனார்கள். ஆனால் கூட்டமைப்பு எடுத்த அடுத்த முயற்சி, மகிந்த ராஜபக்சவை ஆட்சிக் கட்டிலில் இருந்து அகற்றியது.

மைத்திரி - ரணில் கூட்டரசுக்கு ஆதரவளிப்பதைக் கூட்டமைப்பு செய்கின்ற மாபெரும் தவறென இன்று சப்பைக்கட்டு கட்டுபவர்கள், புலிகள் கூட இத னையே விரும்பியிருப்பர் என்ற யதார்த்தத்தை உணரத் தவறுகின்றனர். ஏனெனில், கடந்த கால இலங்கை அரசியலில், 'கிங் மேக்கராக' புலிகளே இருந்து வந்துள்ளனர். தென்னிலங்கையில் ஆட்சிப் பீடம் ஏறுபவர்களை ப்புலிகளே தீர்மானித்தனர் என்பதை எவரும் மறந்துவிடமுடியாது. 2005 இல் பதவிக்கு வரவேண்டிய ரணிலை, அவரின் கனவை அடியோடு தகர்த்தவர்கள் புலிகள் என்பதை யார் மறுப்பர்? ரணிலை நிராகரித்து மகிந்தவை அரியணையேற்றிய புலிகள், மகிந்த பூச்சாண்டி புரியத் தொடங்கி யவுடன் அவரையும் அரசியலில் இருந்து அப்புறப் படுத்தவே விரும்பியிருப்பர். ஆனால், அதற்கு அவ காசம் கொடுக்காமல் மகிந்த செயற்பட்ட விதம் தான், புலிகளும் மூச்சு விடமுடியாமல் பேரழிவைச் சந்திக்க நேர்ந்தது. எனவே அவர்கள் அன்று செய்ய வேண்டியதை, காலம் கடந்தேனும் கூட்டமைப்பு செய்து முடித்தமைதான், இன்று எமக்குக் கிடைத் துள்ள அரசியல் பலம்.

ஆனால், அந்த அரசியல் பலத்தை சிதைத்து விடத்தான், இந்த அரசியல் கைதிகள் விவகாரத்தை கையில் எடுத்துள்ளன சில சக்திகள். உண்மையில் அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்றால் தாங்கள் உருப்படியாக ஏதேனும் ஒன்று செய்யாமல், அவர்கள் உண்ணாவிரதம் இருக்கும் வரை பார்த்தி ருந்து விட்டு, கூட்டமைப்பை நோக்கி விரல் நீட் டுவது மட்டுமே இவர்களுக்குக் கைவந்த கலை.

> **கடந்த கால இலங்கை அரசி யலில், 'கிங் மேக்கராக' புலிகளே இருந்து வந்துள் ளனர். தென்னிலங்கையில் ஆட்சிப் பீடம் ஏறுபவர்களை புலிகளே தீர்மானித்தனர் என் பதை எவரும் மறந்துவிடமுடி யாது. 2005 இல் பதவிக்கு வரவேண்டிய ரணிலை, அவ ரின் கனவை அடியோடு தகர்த் தவர்கள் புலிகள் என்பதை யார் மறுப்பர்? ரணிலை நிரா கரித்து மகிந்தவை அரியணை யேற்றிய புலிகள், மகிந்த வின் பூச்சாண்டி புரியத் தொடங்கியவுடன் அவரையும் அரசியலில் இருந்து அப்புறப் படுத்தவே விரும்பியிருப்பர்.**

பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொண்ட நடை பயணம் போல அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் ஜன நாயகப் போராட்டங்களை இந்த சக்திகள் செய்த னவாஎன்றுகேட்டால், பதில்இல்லையென்பதாகவே இருக்கும். தாங்கள் செய்யாத ஒன்றை கூட்டமைப்பு செய்ய வேண்டுமென இவர்கள் நினைப்பது எவ் விதத்திலும் நியாயமாகாது.

பாதீட்டை எதிர்க்கச் செய்து, நல்லாட்சி அரசை(?) வீட்டுக்கு அனுப்பினால், பாதிக்கப்படப் போவது எந்தவொரு அரசியல்வாதியுமல்ல. மாறாக சாதா ரண தமிழ் மக்கள் தான். இதைத்தான் "மகிந்த காலம் மீண்டும் வர கூட்டமைப்பு இடமளிக்கக் கூடாது. அப்படி வந்தால், அனுராதபுரம் வரை நடைபயணம் போக முடியாது. பல்கலைக்கழக வாசலையே தாண் டுவது கடினம்" என கூறியிருக்கிறார் தவராசா. ஏனெனில் தமிழ் அரசியல்வாதிகளுக்குத் தேவை தமிழ் மக்களின் வாழ்வாதாரமோ, விடிவோ அல்ல. தத்தமது வாழ்க்கை சொர்க்கபுரியாக இருக்க வேண் டும். பதவி சுகங்களில் புரள வேண்டும். அவ்வளவு தான். அதற்குப் பின்னர் மக்களாவது, மண்ணாங் கட்டியாவது.

சரி, ஏனைய தமிழ் அரசியல் சக்திகள் ஏன் கூட்ட மைப்பை மட்டும் அரசியல் கைதிகளின் விடுவிப் புக்காகப் போராடச் சொல்கின்றன? அதிலும் ஒரு நியாயம் இருக்கவே செய்கிறது. ஏனெனில் தங்களின் குரலாக நாடாளுமன்றில் ஒலித்து, அரசுக்கு அழுத் தம் கொடுக்கத்தான் கூட்டமைப்பினருக்கு மக்கள் வாக்களித்தனர். ஆனால் அதை விடுத்து தங்களு டைய பதவிகளைத் தக்கவைப்பதிலும், உட்கட்சி குத்துவெட்டுகளிலும் மட்டுமே கூட்டமைப்பினர் முழுமூச்சாக ஈடுபடுவதாக மக்கள் கருதுகின்றனர். அதற்கேற்றாற்போலவே கூட்டமைப்பின் அண் மைக்காலச் செயற்பாடுகளும் இருக்கின்றன. எனவே இதுவரை செய்த அரசு சார்ந்த போக்கை விடுத்து இனியாவது மக்கள் நலன் சார் அரசியலை கூட்ட மைப்பு முன்னெடுப்பதன் மூலமே, தமக்கு வாக்க ளித்த மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்க முடியும். ■

சுற்றுதே சுற்றுதே பூமி

தொகுப்பு- ஏ.கே.சங்தா

'பப்ளிசிட்டி' ஆசை!

கனடாவில் wing walking எனப் படும் விமானத்தின் இறக்கைமீது நடந்த வாறே ஒருவர் அதனை வீடியோ எடுத்துக்கொண்டிருந்தார். அப்போது தரை யிரங்கத் தயாரான நிலையில் திடீரென விமானம் கட்டுப்பாட்டை இழந்துள் ளது. இதனால், நிலை தடுமாறிய அந்த நபர் தனது பரசூட்டைத் திறக்கக்கூட நேரமின்றி முகங்குப்புற விழுந்து பரி தாபமான முறையில்உயிரிழந்துள்ளார். சாகசங்கள் செய்து பிரபல்யம் அடைய நினைக்கும் ஒவ்வொருவரும் தங்களது பாதுகாப்பை உறுதிபடுத்திக் கொள்வது மிக மிக அவசியமாகும்.

60 க்கும் 15 க்கும் மிஸ்கோல் நட்பு



கைத்தொலைபேசி அனைவரின் கைகளிலும் விரல்களைப் போல் இணைபிரியாமல் இருப்ப தால் 'ஒன்லைன்' நட்புக்களும், 'மிஸ்கோல்' நட்புக்களும் சகஜமான போதிலும் வயது, பால் என்ற எவ்வித வேறுபாடுகளும் இன்றி மலரும் நட்புக்கள் சில நேரங்களில் விமர்சனத்துக்கு உள்ளாவதுண்டு.

இந்தியாவில் 15 வயதான சிறுவன் ஒருவன், தவறுதலாக அழைத்த ஒரு செல்போன் எண் ணில் பேசிய பெண்ணின் குரலால் ஈர்க்கப்பட்டு, அடிக்கடி பேச ஆரம்பித்தான். அவர்களின் நட்பு ஆழமாக, இருவரும் நேரில் சந்திக்க முடிவுசெய் தனர்.அப்போது காத்திருந்தது பேரதிர்ச்சி. அந்த இனிமையான குரலின் சொந்தக்காரி 60 வய தான ஒரு மூதாட்டி. அம்மூதாட்டியின் குடும்பத் தினர் இருவருக்கும் திருமணம் செய்து வைக்க முயற்சி செய்த போதிலும் அதை மறுத்த மூதாட்டி, சிறுவன் பேசிய விதம் தனக்குப் பிடித்திருந்ததாக வும், அவரை நண்பனாக நினைத்ததாகவும், திரு மணம் செய்துகொள்ள நினைக்கவில்லை என் றும் கூறியுள்ளார்.

தொழில்நுட்பங்களின் வளர்ச்சி இப்போது மனி தர்களை எந்த நிலைக்குத் தள்ளியுள்ளது என்பதை உணராமலே எம் வாழ்க்கை தொழில்நுட்பத் தோடு ஓடிக்கொண்டிருக்கிறது.

உறவுப் பாலம்

ஹாங்காங்கில் இருந்து சீனாவுக்குச் செல்லும் நேரத்தை 3 மணித்தியாலங்களி லிருந்து 30 நிமிடங்களாகக் குறைந்துவிடும் உலகின் மிக நீளமான கடல் பாலமானது, சீனாவின் சூஹாய் நகரில் திறந்துவைக்கப் பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டிலேயே திறக் கப்பட இருந்த இந்தப் பாலம், மீண்டும் மீண்டும் ஏற்பட்ட தாமதங்களால் தள்ளிப் போடப்பட்டு வந்த நிலையில் இந்த வருடமே திறந்து வைக்கப்பட்டுள்ளது. 68 மில்லி யன் மக்களை இணைக்கும் இந்தப் பாலம்,

சுற்றுலாப் பயணிகளின் போக்குவரத்தை எளிதுபடுத்துவதோடு இதில் பயணம் செய்ய சிறப்பு வாடகைக் கார்கள், விரைவு பஸ்கள் போன்றவற்றைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய வசதியும் கொண்டுள்ளது.பாதைகள் அதிகரிக்க அதிகரிக்க உலகம் சுருங்கிக் கொண்டே போகிறது.

இரும்பை உண்ணும் விசித்திரன்!



வறுமையின் உச்சகட்டமா? காலத்தின் பரிதாபமா? என்று யோசிக்க வைக்கும் அளவுக்கு சில சம்பவங்கள் நடந்தேறு கின்றன. அதுபோன்ற ஒரு சம் பவம் தான் எத்தியோப்பியா வில் நிகழ்ந்துள்ளது. எத்தியோப் பியாவைச் சேர்ந்த 33 வயதான மனநோயாளி ஒருவர், 10 சென்றி மீற்றர் நீளமுடைய 122 ஆணி கள், நான்கு ஊசிகள், பல் குத் தும் குச்சி மற்றும் உடைந்த கண் ணாடித்துண்டுகள் போன்ற வற்றை விழுங்கியிருக்கிறார்.

ஒருவேளை அவர் தண்ணீர் குடித்துக் குடித்து இந்த ஆணி களை விழுங்கியிருக்கலாம். அவ் வாறு இல்லையெனில் அது அவருடைய வயிற்றைக் கிழித்து, மோசமான நோய்த்தொற்றை ஏற்படுத்தி இருக்கும். அதனால் அவருக்கு மரணம் கூட ஏற் பட்டிருக்கலாம் என அவருக்கு அறுவைச் சிகிச்சை செய்த வைத் தியர்கள் தெரிவித்துள்ளனர்.

40 வயதில் 44 குழந்தைகள்

உகாண்டாவைச் சேர்ந்த மரியம் என்ற பெண்மணி தனது வாழ்நாளில் 18 ஆண்டுகளைப் பிரசவ காலத் திலேயே கழித்துள்ளார். 12 வயதில் 28 வயதுடைய நபருக்குத் திருமணம் செய்து வைக்கப்பட்டார் மரியம். தற்போது தனது 40 ஆவது வயதில் 44 குழந்தைகளின் தாயாக இருக்கின்றார்.

இவர் 44 குழந்தைகளை 6 இரட்டைக் குழந்தைகள், 4 முறை மூன்று குழந்தைகள், 3 முறை 4 குழந்தைகள், 8 தனிக் குழந்தைகள் என்று பிரசவித்திருக்கிறார். இந்த 44 குழந்தைகளில் 38 குழந்தைகள் தற்போது உயிருடன் இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

உலகத்தில் இப்போதெல்லாம் குடும்பங்கள் இவ் வாறு தான் பரிதாபமான நிலைக்கு உள்ளாகி உள்ளன. நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் எனும் பழ மொழி பழைய மொழியாகி விட்டது.

கைகொடுக்கும் கண்டுபிடிப்பு

ஊசியைப் பயன்படுத்தாதவர்களே இருக்க முடியாது. எதிர்பாராத நேரத்தில் கைகொடுக்கும் ஒரு கண்டுபிடிப்புத்தான் ஊசி.

பழங்காலத்தில் இருந்தே ஊசி போன்ற ஒரு பொருளை மனிதர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள். துணி, தோலாடைகளை இணைக்க செப்புக் கம்பியால் ஆன ஊசி பயன்பட்டிருக்கிறது என்பதைத் தொல்லியல் ஆய்வாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

நவீன ஊசியைக் கண்டுபிடித்த பெருமை அமெரிக்காவைச் சேர்ந்த வால்டர் ஹண்ட்டைச் சேரும். இவர் ஏராளமான பொருட்களைக் கண்டுபிடித்திருக்கிறார்.

1846 ஆம் ஆண்டு பூட்டுத் தையல் இயந்திரத்தைக் உருவாக்கினார். ஆனால், இந்த இயந்திரத்தின் மூலம் ஏராளமான ஏழைப் பெண்களின் வேலைவாய்ப்பு பறிபோகும் என்று இவரது மகள் சொன்னார். அதனால் வால்டர் ஹண்ட், தன்னுடைய கண்டுபிடிப்புக்குக் காப்புரிமையைப் பெறவில்லை. 1849 ஆம் ஆண்டு பணக் கஷ்டத்தில் இருந்தார் வால்டர். ஒரு நாள் தன்னுடைய பட்டறையில் அமர்ந்து, நண்பரிடம் வாங்கிய கடனை எப்படி அடைப்பது என்று யோசித்துக்கொண்டிருந்தார். அவரது கையில் நீண்ட வயர் ஒன்று சிக்கியது. அதை வைத்து ஏதேதோ உருவங்களைச் செய்வதும் பிரிப்பதுமாக இருந்தார். அதில் அவருக்கு ஏதோ ஒரு யோசனை தோன்றியது. பல்வேறு வடிவங்களைத் தாளில் வரைந்து பார்த்தார்.

இறுதியில் ஊசியின் (Safety Pin) வடிவத்தை உருவாக்கினார். 1849 ஆம் ஆண்டு ஏப்ரல் மதம் 10ஆம் திகதி தன்னுடைய கண்டுபிடிப்புக்குக் காப்புரிமையைப் பெற்றார். பிறகு அந்தக் காப்புரிமையை டபிள்யூ. ஆர். கிரேஸ் நிறுவனத்துக்கு விற்றுவிட்டார். அதில் கிடைத்த பணத்தை நண்பரிடம் கொடுத்து, கடனை அடைத்தார்.

இவர் கண்டுபிடித்த ஊசியின் வடிவம்தான் இன்றுவரை பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இன்றும் ஊசியின் பயன்பாடு உலக அளவில் அதிகமாகவே இருக்கிறது. இந்தியாவில் ஊசியை அடுத்தடுத்த தலைமுறைக்கு, தாய் மகளுக்குச் சீதனமாகக் கொடுக்கும் பழக்கம் இருந்துவருகிறது.

உக்ரைனில் குழந்தைகளின் சட்டையில் ஊசி மாட்டினால், அது கெட்டசக்திகளிடமிருந்து குழந்தைகளைக் காப்பாற்றும் என்று நம்புகிறார்கள். ஐரோப்பிய நாடுகளில் ஊசி அதிர்ஷ்டத்தைத் தருவதாக நினைக்கிறார்கள்.

அன்பின் வசம்

ஒருவர் தெருவோரத்தில் இருந்த தன் பசுவை இழுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்து கொண்டிருந்தார். அமைதியாக நடந்து வந்துகொண்டிருந்த பசு, திடீரென அடம்பிடித்து தெருவில் அமர்ந்து கொண்டது. அகலம் குறைந்த அந்தத் தெருவில் சைக்கிள் தவிர வேறு எந்த வாகனங்களும் செல்லமுடியாதபடி பசு படுத்திருந்தது. அவரால் எவ்வளவு முயற்சி செய்தும் அந்தப் பசுவை இம்மியளவும் நகர்த்த முடியவில்லை.



அந்த வழியாக ஒரு பொலிஸ் காரர் வந்தார். தன்னுடைய முரட்டு மீசையையும் கையிலிருந்த லத்தியையும் வைத்து மிரட்டிப் பார்த்தார். பசு அசையவில்லை.

அப்போது ஐஸ்கிரீம் விற்கும் நபர் ஒருவர் அந்த வழியாக வந்தார். குளிர்ச்சியாகப் பேசிப்பார்த்தார். நகராமல் நின்ற பசுவை மூவரும் சேர்ந்து இழுத்தனர். முயற்சிகள் தோல்வியில் தான் முடிந்தது. மல்யுத்த போட்டியொன்றில் வெற்றி பெற்று திரும்பிக் கொண்டிருந்த வீரர் ஒருவர் அந்த வழியாக வந்தார். ஒரு பசுவை வீதியில் இருந்து நகர்த்த மூன்று பேர் செய்து கொண்டிருக்கும் முயற்சிகளைப் பார்த்து நகைத்தார். மூன்று பேரையும் நகரச் சொல்லி விட்டு மல்யுத்த வீரர் தனித்து பசுவை இழுத்துப் பார்த்தார். பசு அசரவில்லை.

அந்த வழியாக ஒரு சிறுவன் வந்தான். அவன் வீதியருகே வளர்ந்து நின்ற புற்களைப் பறித்து கட்டாகக் கட்டி பசுவின் முகத்தருகே காட்டினான். பசு புல்லைச் சாப்பிட எழுந்தது. சிறுவன் புல்லைப் பசுவிடம் காட்டிக்கொண்டு நடக்க ஆரம்பித்தான். பசுவும் அவனோடு நகர்ந்தது.

வாழ்த்தலாம் வாங்கோ

வாழ்த்தலாம் வாங்கோ!

நவம்பர், டிசம்பர் மாதங்களில் பிறந்தநாள் கொண்டாடும் சிறார்களின் விவரங்களை, இப்படிவத்தில் பூர்த்தி செய்து, வெட்டி, தெளிவான புகைப்படத்துடன் அனுப்புங்கள். உங்களை வாழ்த்துவதற்கு எதிரொலி தயாராக உள்ளது.

பெயர் :

பிறந்த திகதி :

வயது :

முகவரி :

தொலைபேசி இலக்கம் :

வாழ்த்தலாம் வாங்கோ
அம்பலம் பதிப்பகம்,
இல. 241,
கைதடி – மானிப்பாய் வீதி,
உடுவில், யாழ்ப்பாணம்.
அல்லது
ethirolimedia@gmail.com

மூளைக்கு வேலை

			9		4			
	3						9	
1				6				2
			4		2			
6				3				4
	5						4	
			7		5			

சவாலே சமாளி

கீழே உள்ள குறிப்புகள் ஒரு நாட்டைக் குறிக்கின்றன. அது எந்த நாடு என்பதைக் கண்டுபிடியுங்கள்.

1. தென் அமெரிக்காவில் அமைந்துள்ள நாடு.
2. இதன் தலைநகர் கராகஸ்.
3. 1811 இல் தனது சுதந்திரத்தை அறிவித்த முதல் ஸ்பானிய-அமெரிக்கக் காலனிகளில் இதுவும் ஒன்று.
4. மிகப்பெரிய எண்ணெய்க் கிணறுகளைக் கொண்ட நாடு.
5. ராட்சத எறும்புத்தின்னி, அமேசான் டொல்பின் போன்றவை இந்த நாட்டின் சிறப்பு உயிரினங்கள்.
6. பலநாடுகள் அடிமைமுறையை ஒழிப்பதற்கு முன்பாகவே 1854 இல் இந்த நாடு அதைச் சாதித்துக் காட்டியது.
7. உலகின் மிக உயரமான ஏஞ்சல் அருவி இங்குதான் உள்ளது.

மின்சாரத்தின் தந்தை

முன்னோடிகள்

சுமார் இரு நூற்றாண்டுகளுக்கு முன்பு மைக்கேல் ஃபரடே (Michael Faraday) பிறக்காமல் போயிருந்தால் ஒருவேளை நாம் நிரந்தரமாக இருண்ட காலத்திலேயே இருந்திருக்கக்கூடும். ஆம், இவரது முயற்சிகளின் தொடர்ச்சியாகவே மின்சாரம்பொதுப்பயன்பாட்டுக்கு வந்தது.

- தெற்கு லண்டனில் பிறந்த மைக்கேலின் இளமைக் காலம் வறுமை நிறைந்தது.
- மைக்கேல் முதலில் கற்றுக்கொண்ட தொழில் புத்தகங்கள் கட்டுவது. அதுவே அவருக்கு புத்தகங்கள் மீதான ஈர்ப்பை உருவாக்கியது. புகழ்பெற்ற வேதியியல் விஞ்ஞானி ஹம்ப்ரி டேவியின் எழுத்துகளைப் படித்ததால் ஏற்பட்ட ஆர்வம் விஞ்ஞானத்தின் பக்கம் அவரைத் திரும்பியது.
- டேவியின் கூட்டங்களில் அவரது பேச்சை ஆர்வத்துடன் கேட்ட மைக், அதை அவருக்கே எழுதி அனுப்பினார். அசந்துபோன டேவி, மைக்கேலை தனது மாணவனாக சேர்த்துக்கொண்டார். 'எவ்வளவோ கண்டுபிடித்திருக்கிறேன். ஆனாலும், என் மிகச்சிறந்த கண்டுபிடிப்பு மைக்கேல் ஃபரடே' என்பாராம் டேவி.
- காந்தவியல் - மின்சாரவியல் இடையே உள்ள தொடர்பை ஆய்வுகள் மூலம் நிரூபித்தார் மேதை மைக்கேல் ஃபரடே. உலகின் முதல் மின்சார டைனமோ அவராலேயே உருவாக்கப்பட்டது.
- மின்காந்த தூண்டலைக் கண்டுபிடித்தவர். உலோகங்களை பிரித்தெடுக்கும் மின்பகுப்பு முறையை செம்மைப்படுத்தியவர்.
- கம்பிச் சுருளுக்குள் காந்தத்தை நகர்த்துவதன் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும் என்று கண்டறிந்தார்.
- நல்ல எழுத்தாளர். அறிவியலை எளிய மனிதனுக்கும் புரிகிற வகையில் எப்படி சொல்ல வேண்டும் என்பதற்கு அவரது 'மெழுகுவர்த்தியின் வேதியியல் வரலாறு' புத்தகம் சிறந்த எடுத்துக்காட்டு.
- 'ஃபாரடே விளைவு' இன்றைக்கு மூலக் கூறுகளின் வடிவத்தை விளக்கப் பயன்படுகிறது. வாயுக்களை முதன்முதலில் திரவமாக மாற்றி சாதித்தவரும் ஃபரடேதான்!
- உலகிலேயே அதிகபட்ச பரிசோதனைகள் செய்து பார்த்த அறிவியல் அறிஞர் என்று போற்றப்படுகிறார். பல ஆண்டுகள் ஓயாமல் ஆய்வு செய்ததில், 6 ஆண்டுகள் படுத்த படுக்கையாகக் கிடக்கும் அளவுக்கு அறிவியல் அவரை ஆக்கிரமித்திருந்தது.

புலிகளை நேசித்த இந்திராகாந்தி

■ மோகன் வைத்திலிங்கம்

September 7, 1956

Darling Rajiv,

We have received a huge tiger's skin. The tiger was shot by the Maharaja of Rewa only two months ago. The skin is lying in the ballroom. Every time I pass it I feel very sad that instead of lying here he might have been roaming and roaring in the jungle. Our tigers are such beautiful creatures, so graceful you can see their muscles rippling under their skins. Such a short time ago he must have been King of the Jungle - striking terror in the hearts of the other animals.

I am so glad that nowadays more and more people prefer to go into the jungles with their cameras instead of guns. It seems such a shame to deprive anything of the joy of living just for our pleasure.

Lots of love,

கடந்த சில நாட்களுக்கு முன்னர் எனது முகநூல் பயணத்தின்போது மிகவும் உருக்கமான செய்தி ஒன்றினை நண்பர் ஒருவர் எம்மோடு பகிர்ந்து கொண்டார். அதன் உள்ளடக்கம் மிகவும் அற்புதமானது. ஒரு தாய் தனது மகவுக்கு எழுதிய கடிதம் அது. மிகவும் பொறுப்புக் களைச் சுமந்து கொண்டிருந்த தாய்க்கும் ஒரு சிறு சம்பவம் அவர் மனதை உறுத்தியதிலிருந்து எழுந்த எழுத்துக்கள் அவை. சமூகப் பொறுப்புள்ள தாயொருவரால் இப்படித்தான் சிந்திக்க முடியும் என்பதையும், ஒரு நாட்டுப்பற்றுள்ள ஒருவரால் இப்படித்தான் சிந்திக்க முடியும் என்பதையும், சூழலை நேசிக்கின்ற ஒரு மனிதரால் இப்படித்தான் சிந்திக்க முடியும் என்பதையும் அக் கடிதம் சொல்லுவதைக் கண்டேன். அதைவிட பல செய்திகளைச் சொல்லுகின்ற தொரு பதிவு என்றும் அதை எடுத்துக் கொள்ளலாம். 1956 ஆம் ஆண்டு நடைபெற்ற அந்தச் சம்பவத்தை இட்டுச் சில மனப்பபூர்வமான கேள்விகள் என்னுள் எழுந்தன. எமக்கு நடைபெற்று முடிந்ததொரு அரசியல் அனர்த்தம் பற்றி இப்படியும் நான் சிந்தித்தேன்.

மறைந்த இந்தியப் பிரதமர் மதிப்புக்குரிய திரு மதி இந்திரா காந்தியால் அவரது இளவலான திரு. ராஜீவ் காந்திக்கு 1956 இல் எழுதப்பட்ட கடிதம் தொடர்பாகவே நான் இந்தக் கட்டுரையை எழுதுகிறேன்.

அழகான ஆனால் மிகவும் உணர்வுபூர்வமான கடிதம் அது. அந்தப் பதிவை இட்ட அவர் முகநூல் வழியாக ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார். இந்தக் கடிதத்திலே தொடர்புபட்ட இருவரும் நம்மிடையே இப்போது இல்லை.

ஆனால், இந்தக் கடிதத்தை இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராக இப்போது இருப்பவர் படித்திருப்பாரா? (இந்திரா காந்தியின் பேரன். ராஜீவ் காந்தியின் மகனான ராகுலைத்தான் அவர் குறிப்பிடுகிறார்) அப்படி அவர் படித்திராவிட்டால் தற்போது இதனை அவரோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம். அத்துடன் ஒரு வேண்டுகோளையும் அவரிடம் சமர்ப்பிக்க விரும்புகிறோம். அதாவது அவர் கொண்டுள்ள வேட்டையாடுகின்ற அந்த மிகவும் மனிதாபிமானமற்ற ஒய்வுநேர விருப்பத்தை, மிகவும் கொடூர மனப்பான்மையென அவரது பேத்தியார் இந்திரா காந்தி கண்டித்த அந்த நடிவடிக்கையை விட்டுவிடும்படி கேட்கப் போகிறோம். - என்று அந்தக் குறிப்புச் சொல்கிறது.

மேற்குறிப்பிட்ட ஆங்கிலத்தில் எழுதப்பட்ட அந்தக் கடிதத்தின் உள்ளடக்கம் பின்வருமாறு அமைகிறது.

"நியூ டெல்கி - 07 செப்ரெம்பர் 1956
எனது அன்பு மகனே!

ஒரு பெரிய புலியின் தோல் எமக்குக் கிடைத்திருக்கிறது. அந்தத் தோலுக்குரிய புலி இரண்டு மாதங்களுக்கு முன்னதாகவே றெவா இராஜஸ்தானிய மகாராஜாவினால் வேட்டையாடப்பட்டது. சுட்டுக் கொல்லப்பட்ட அந்தப் புலியின் தோலானது எமது மகிழ்வறையில் அழகுக்கென விரித்து வைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு முறையும் அந்த இடத்தைக் கடந்து செல்லும்போதும் என் மனம் கவலை கொள்கிறது.

ஏனென்றால் அது தோலாக இங்கே கிடப்பதை விட உயிரோடு காட்டில் உறுமியவாறு மிடுக்கோடு அலைந்து திரிவதைத்தான் பொருத்தமென நான் எண்ணுகிறேன். எமது நாட்டுப் புலிகள் மிகவும் தெய்வீகமான அழகைக் கொண்டவை. அதன் தோலுக்குக் கீழ் உருண்டு திரண்டு அலை அலையாகக் காணும் தசைகளின் அழகை நீ பார்த்திருக்கலாம்.

கொல்லப்பட்ட அந்தத் தருணத்துக்கு முன்னர் அது அந்தக் காட்டில் ஒரு ராஜாவைப் போல, அங்கு உள்ள மற்றைய ஜீவராசிகளின் இதயத்தில் ஒருவித பயத்தை வரவழைத்தவாறு வலம்வந்து கொண்டிருந்திருக்கிறது.

ஆனாலும் தற்போது பலர் தமது ஒய்வு நேரங்களில் காட்டுக்குள் போக விரும்புகிறார்கள், துப்பாக்கிகளோடு அல்ல. மாறாக இயற்கையை நிழற்படங்களாகத் தக்க வைக்கின்ற படப்பிடிப்புச் சாதனங்களோடு அவர்கள் செல்வதைப் பார்க்கும்போது எனது மனம் புளகாங்கிதமடைகின்றது. மீண்டும் புலித்தோல் ஞாபகத்துக்கு வருகிறது.

இத்தகையதொரு இழப்பில்தான் எமக்கு மகிழ்ச்சி கிட்ட வேண்டுமா? என்று எண்ணும்போது எனக்கு வெட்கமாக இருக்கிறது.

அளவு கடந்த அன்புடன்
அம்மா இந்திரா"

(இப்படியாக அந்தக் கடிதம் முடிவடைகிறது)

இந்தக் கடிதத்தைப் படித்து முடித்தபோது என்னுள் எழுந்ததொரு நப்பாசை என்னவெனில், இத்தகைய மானிட நேயத்தோடு சிந்திக்கின்றவர் இன்று உயிரோடு இருந்திருந்தால் - எமது மக்கள் நந்திக் கடல்வரை கொண்டு செல்லப்பட்டு அவ்வாறு அநாதைகளாக்கப்பட்டிருப்பார்களா?

நாய்களைப்போன்று சுட்டுத்தான் கொல்லப்பட்டிருப்பார்களா?முடிவுகள் வேறுவிதமாக அமைந்திருந்திருக்கலாம் அல்லவா..???? அவர் அணுகுமுறை வேறு விதமாக அமைந்திருக்கலாம்.? ஆனால் மனம் ஒரு குரங்கு என்று சொல்வதைப் போல! அவர் இருந்தபோதுதானே பஞ்சாப்பில் படுகொலைகள் நடந்தன? பொற்கோயிலுக்குள் இந்திய இராணுவம் புகுந்தது? என நாணயத்தின் மறுபக்கத்தையும் என் மனம் பார்க்க விழைகிறது. இருந்தும் அவர் இருந்திருந்தால் ஈழத் தமிழரை எதிர்த்த ஒரு நிலைப்பாட்டுக்கூடாக இந்து சமுத்திர அரசியலை நகர்த்தியிருக்க மாட்டார்.

ஈழத் தமிழர்களின் மனங்களில் இந்தியாவுக்கு எதிர்ப்பலையை ஏற்படுத்தியிருக்கின்ற பல நடவடிக்கைகளை அவர் நிச்சயம் தவிர்த்திருப்பார். இந்தியாவுக்கு எதிரான பல நடவடிக்கைகளை இலங்கை அரசுக்கூடாக சீனா நகர்த்த எத்தனித்த இராஜ தந்திர நகர்வுகளை இட்டு இந்திராகாந்தி கொண்டிருந்த அரசியல் படிப்பினை வேறு. 1970களில் ஸ்ரீமாவோ அரசாங்கம் சீன தேசத்துடன் ஏற்படுத்திக் கொண்ட நல்லுறவு தமக்கு ஏற்படுத்தப்பட்ட ஒரு சிவப்பு சமிக்ஞையாக அவர் கண்டு கொண்டார். எனவே ஈழத் தமிழ் எதிர்ப்பென்ற முடிவு "இந்தியாவின் தற்கொலை" என அவர் நன்றாக அறிந்து வைத்திருந்தார். முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி இன்றிருந்தால் இன்றைய இந்தியாவின் இராஜதந்திர போக்கையிட்டும், தான் வளர்த்த காங்கிரஸ் கட்சியின் போக்குப் பற்றியும் கவலை கொள்வாரா? ■

கனதியான பிரசவம் - கலைமுகம்

இணையத்துடன் நகரும் இந்த வாழ்க்கையில், சமூக வலைத்தளங்களில் எழுதுவது, மேலோட்டமாக வாசிப்பது, கருத்திடுவது, விவாதிப்பது என்பதோடு பலரின்வாசிப்புத்தேடல்முடிந்துவிடுகிறது. நிலைமை இவ்வாறிருந்தாலும் தீவிரமாக வாசிப்பவர்கள் இப்போதும் இருக்கத்தான் செய்கின்றார்கள். அவ்வாறு நீங்களும் எழுத்துக்கள் மீது தீராத காதல் கொண்டவர்களெனின் திருமறைக் கலாமன்றத்தின் வெளியீடான 'கலைமுகம்' கலை இலக்கிய இதழை இப்போதே படித்துவிடுங்கள்.

கட்டுரைகள், கவிதைகள், சிறுகதை, நூல் மதிப்பீடுகள், பத்திகள், நேர்காணல், பதிவுகள் என பன்முக அம்சங்களுடன் கலைமுகத்தின் 66 ஆவது இதழ் வெளிவந்துள்ளது. போர் தின்ற 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னரான புலம்பெயர் ஈழத்து நாவல்கள் பற்றிய சி.ரமேஷின் கட்டுரை பல நூல்கள் பற்றி விரிவாக அலசுகிறது. தென்னிந்திய இயக்குநர் மீரா கதிரவனின் நேர்காணல் இந்திய சினிமாவின் மற்றொரு பக்கத்தை விரிவாகப் பேசுகிறது. அண்ணாவியார் அ.பாலதாஸ் அவர்களின் அஞ்சலிக் கட்டுரையில் மரபுவழி நாடக வரலாறு விரிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு கனதியான படைப்புக்களுடன் வெளிவந்திருக்கும் கலைமுகம், இலக்கிய வாசகர்களுக்கான மிகச் சிறந்த இதழ்.

- அகரா

● வேதநாயகம் தபேந்திரன்

சிக்கனச் சிகரங்கள்

"சிறுகக்கட்டி பெருக வாழ்" இது எமது முன்னோர்கள் கூறிய பழமொழி.வாழ்க்கையை சிக்கனமாகவும் திறமையாகவும் அமைத்து, நன்றாக வாழ்ந்து கொள் என்பதே இதன் கருத்து.

ஆனால் இன்று எம்மவர்கள் சிறுகக் கட்டி பெருக வாழ்கின்றார்களா? இக் கேள்விக்கு இல்லை என்பதே விடையாகும்.

வீடு கட்டுதலில் தொடங்குவோம். காலுக்குச் செருப்பா? செருப்புக்குக் காலா? செருப்புக்குக் கால் என்பதே எம்மவர் பலரது கொள்கையாக உள்ளது. பத்துப் பதினைந்து பேர் உள்ள குடும்ப அமைப்பு இருந்த போது மண் வீடு,திண்ணை என யாவரும் அதனுள் அடங்கி வாழ்ந்தனர்.போர் தந்த புலம் பெயர்வால் குடும்ப அமைப்பு சிதறி விட்டது.

ஆனால் பண வருவாயோ பல மடங்கு பெருகி விட்டது. வயதான கிழவன், கிழவி வசிப்பதற்குப் பென்னாம் பெரிய மாடி வீடு. கேட்டால் சொல் வார்கள், "பிள்ளைகள் கோயில் திருவிழாவுக்கு வெளி நாட்டிலிருந்து வந்தால் தங்குவதற்கு இடம் தேவை. அது தான் இப்படி பெரிய வீடாகக் கட்டினாங்கள்." ஆனால் அவர்களது பிள்ளைகள் யாவரும் நாலைந்து வருடத்துக்கு ஒருமுறை தான் ஒரே நேரத்தில் வருவார் கள். அதற்காக இப்படி ஒரு பெரிய வீடு.பொருளா தாரத்தில் ஒப்பீட்டுச் செலவுக் கோட்பாடு என்கிறார் கள். அதாவது ஒரு பொருளை உற்பத்தி செய்வது இலாபமா? அல்லது அதனை வேறு ஒருவரிடத் திலிருந்து வாங்குவது இலாபமா? எனக் கணக்குப் பார்த்து தீர்மானத்தை எடுப்பது வழமை.

ஆனால் எம்மவரது வாழ்க்கைச் செலவுக் கோலத் தைப் பார்த்தால் பெரும்பாலானோர் ஆடம்பரத்துக் காகத் தான் பணத்தைக் கொட்டுவது வழமையாகி விட்டது.

வருமானம் குறைந்த மக்களுக்கான அரச, அரச சார்பற்ற நிறுவனங்களது வீட்டுத் திட்டங்கள் பல மணல் இல்லாமல் தடைப்பட்டு நீள்கிறது. அதே வேளை இருவர், நால்வர் இருப்பதற்குப் பென்னாம் பெரிய வீடுகள் கட்டிப் பல லொறி மணல் முடங்கி உள்ளது.

மணல் கொடுக்கும் போது குடும்ப அளவு பார்த்து வீட்டின் தன்மையைத் தீர்மானிக்கும் முறையைக் கொண்டு வரல் வேண்டுமென மணலுக்கு அலையும் குடும்பங்கள் கவலையுடன் கூறுகின்றனர்.

வெளிநாடுகளில் உழைக்கும் சிலர் அங்கு அள வுக்கு மீறி கடன்பட்டு இங்கு தமது விலாசம் காட்டு வதற்காக பெரிய வீடுகளைக் கட்டுகின்றனர்.அந்தக் கடனுக்காக இரண்டு வேலை, நாலுவேலை செய்து இராப் பகலாக நித்திரை தொலைத்து பல வருடங்கள் அலைகின்றனர்.

இந்த விடயத்தில் சிங்கள,முஸ்லிம் மக்கள் மிகவும் முன்னுதாரணமானவர்கள்.

விரலுக்குத் தக்க வீக்கம் என்கிறார்களே அவர்கள் அதனைச் சரியாகக் கடைப்பிடிக்கிறார்கள்.கடைகள் கட்டுவதும் எமது பகுதிகளில் தான் அதிகமாக நிகழ்கிறது. சனத்தொகையின் விகிதாசாரத்தை விட கடைகளின் எண்ணிக்கை அதிகம்.

வெளிநாடுகளில் பணம் வைத்திருக்கும் அறுபது வயதை நெருங்கும் பலர் நினைக்கின்றனர், ஊரில் பிரதான வீதிகள் உள்ள இடத்தில் காணி ஒன்றை வாங்கி மாடிகள் உள்ள பத்துக் கடைகளைக் கட்டு வோம். கடை ஒன்று பத்தாயிரப்படி வாடகைக்கு விடுவோம். மாதம் ஒரு இலட்சம் வருமானம் வரும். அதை வைத்து நாட்டில் 'செற்றிலாகும்' காலத்தில் வாழ்ந்து கொள்ளலாம்.

ஆனால் கட்டிய கடைகள் பல இடங்களில் மூடப்பட்ட நிலையில் இருப்பதைப் பரவலாகக் காண முடிகிறது. கடைக் கட்டடங்களில் சேமிப்புகள் பல இடங்களில் முடங்கி உள்ளது.

இதில் உள்ள மகா கொடுமை என்னவென்றால் வளம் மிகுந்த தோட்டக் காணிகள் பல வெறும் கட்ட டங்களாக உள்ளன. வளர்ந்த நாடுகளில் மண் வளம் மிகுந்த காணிகளில் கட்டடம் கட்ட அனுமதிக்க மாட்டார்கள். சதுப்பு நிலங்களில் தரவைக் காணிக ளில் தான் கட்டடம் கட்ட அனுமதிப்பார்கள்.

காணிப்பயன்பாடு தொடர்பாக தெளிவான ஒரு தீர்மானம் வைத்துள்ளார்கள்.

காகிதத் தாள்களிலான பணத்தை உண்ண முடி யாது என்பதை அவர்கள் தெளிவாகத் தெரிந்து வைத் துள்ளார்கள். ஆனால் எமது நாட்டில் தான் அரசாங்க அதிகாரிகள் தீர்க்க தரிசனமாகச் சிந்திப்பது கிடை யாது. குறுகிய நோக்கிலான சிந்தனைகளும் திட்டங் களும் காலா காலமாகத் தொடர்கிறது.

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டா மென்றார்கள். ஆனால் இன்று ஊருக்கு ஒரு கோயில் அல்ல பல கோயில்கள். அதேவேளை ஊரில் ஒழுங் கான வீடு வாசல், கிணறு, மலசல கூடங்கள் இல்லாத குடும்பங்கள் பல. அவற்றைப் பற்றிக் கதைக்க மாட் டார்கள் யாரும் முன்னோடியாகக் கதைத்தால் அவர வர் செய்த பாவத்துக்குத் தான் இப்படி அனுபவிக் கிறார்கள் எனக் கூறுவார்கள்.

அதே நேரம் கோயிலுக்கு கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப் பலத்த போட்டி. அதிலும் ஸ்பீக்கர் சவுண்ட் சிஸ்ரம் செய்து கொடுப்பதற்குத் தான் அதிகம் போட்டி.

"என்ர ஸ்பீக்கர் தான் ஊரில கோயிலில விலாச மாகப் படிக்கிறது" எனப் பீத்தல் பெருமை சொல் வதில் தனி ஒரு ஆனந்தம். பல இடங்களில் இரவு பக லாக அடிக்கடி விசேட பூசைகளால் ஊர் அமளிப் படுவது நிகழ்கிறது.

வெளிநாட்டில் அல்லது உள்நாட்டில் காசு மெத்திப்போகும் ஒருவருக்கு உரிய முதலீடு தான் திரு மண மண்டபங்கள் கட்டுவது.இந்தத் திருமண மண்டபங்கள் இன்று கொடிகட்டிப் பறக்கிறது. ஆனால் இன்னும் இருபது முப்பது வருடங்கள் போக வெளிநாடுகளில் இருந்து முதலாம் தலைமுறையின் பண அனுப்புதல்கள் நின்று போகப் போகிறது.

வெளிநாட்டுக் காசில் களைகட்டும் கொண்டாட் டங்கள் யாவும் அந்தப் பணம் நின்றுபோகும் காலத் தில் பெருமளவு நின்று போகத் தான் போகிறது.

1996 ஆம் ஆண்டில் தொலைத்தொடர்பு யுகம் பரவலாகத் தொடங்கியது. கொடி கட்டிப் பறந்தது. இன்று அந்த யுகத்தைக் காணமுடியாது. அது போல திருமண மண்டப யுகமும் ஒரு காலத்தில் அற்றுப் போகத்தான் போகிறது.

ஏனெனில் உள்நாட்டு வருவாயில் மட்டும் சீவிக் கும் பெருமளவான குடும்பங்கள் இந்த ஆடம்பர மண்டபங்களுக்குப் போக மாட்டார்கள். அப்போது இந்த மண்டபங்களது இருப்பு கேள்விக்குரியதாகி விடும். சிறுகக் கட்டி பெருக வாழ்ந்து முழு நாட்டுக் கும் உதாரணமாக வாழ்ந்த சமுதாய அமைப்பு இன்று ஊதாரித்தனத்துக்கு உதாரண அமைப்பாக மாறி விட்டது காலத்தின் கொடுமை தானே.மீட்பர்கள் வராத தேசமாகி விட்டதா?

■

முடிவுறா ஏக்கங்கள்

முள்வேலிகள் - துப்பாக்கிகள்
இடையே பிறப்பெடுத்தும்
கரடுமுரடாக கடந்த வாழ்வில்
கனிவான காதல்
இதயத்தில் ஊற்றெடுக்க
விழிகள் மொழிபேசிட
அறுதி செய்த காதல்
மெல்ல நகர மறுத்த கணங்களில்
ஈருள்ளங்களின் திசைகள் மாறின
சேர முடியா வாழ்வின்
திருப்தியற்ற
கணங்களில் இன்று
கனவுதனில் வாழ்வை
திருத்தி திருப்தியடைகின்றன
திரை மறைக்கப்பட்டு
திரையிடப்படும் வாழ்வுதனை
பார்வையிட தடை விழிகளுக்கு
மனசு ரசித்து ருசிக்கிறது
முடிவுற்ற வாழ்வின்
முடிவுறா ஏக்கங்களை...

ஜெ.பி.



எதிரொலி
Ethiroli

தெறிக்கவிட்ட மைத்திரி

■ சனத்

காட்டிக்கொடுப்பு, கழுத்தறுப்பு, கைவிரிப்பு, காலைவாருதல், கூட்சி தாவுதல் என பச்சோந்தி அரசியலுக்கே உரிய அனைத்து அம்சங்களும் இலங்கை அரசியலில் ஓரணியில் அரங்கேறியுள்ளன. இதனால் பரபரப்புக்கு பஞ்சமில்லாத வகையில் இலங்கை அரசியல் களமும் சூடுபிடித்துள்ளது.

கூட்டாட்சிக்கு சாவுமணி அடித்து - சமாதி கட்டிவிட்டு, ரணிலுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுப்பதற்காக மஹிந்தவுக்கு பிரதமர் என்ற மணி மகுடத்தை இரவோடு இரவாகச் சூட்டியுள்ளார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

தான் யாரை சர்வாதிகாரி என்றும் கொடுங்கோல் ஆட்சியாளர் என்றும் விளாசித் தள்ளினாரோ அந்த நபருக்கே அதி உயர் பதவியை - அதுவும் இரவோடிரவாக வழங்குவதற்கு ஜனாதிபதி எடுத்த முடிவானது அரசியல் இராஜதந்திரமா அல்லது அறியாமையின் உச்சக் கட்டமா?

அரசியலில் எதுவும் கடந்துபோகும் என்றால், துரோகியையும் மன்னிக்க முடியுமென்றால், விமர்சனங்கள் எல்லாம் வெறும் வார்த்தை ஜாலம் மட்டுமே என்றால் அரசியலை சாக்கடையென கூறுவதைவிட வேறு எப்படி அழைப்பது?

பிறந்த வீட்டுக்கே (சுதந்திரக்கட்சி) துரோக மிழைக்கும் வகையில் 'பல்டி' அடித்த மைத்திரி, புகுந்த வீட்டில் அரசியல் பத்தினியாக வலம்வருவார் என ஐ.தே.கவினர் போட்ட கணக்கு - விட்டுக் கொடுப்பு தான் இறுதியில் ஆப்பாக மாறியுள்ளது என்பது கசப்பான உண்மையாகும்.

ரணிலுக்கு எதிரான தாக்குதல் எப்போது ஆரம்பமானது?

மிஸ்டர் கிளின் என்று வர்ணிக்கப்படும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக இன்று அல்ல இதற்கு முன்னரே மைத்திரி போர்தொடுக்க ஆரம்பித்து விட்டார்.

பிணைமுறிமோசடி விவகாரத்தை மையப்படுத்தி மிஸ்டர் கிளின் என்ற ரணிலின் நாமத்தை இல்லாது செய்தார். அதன்பின்னர் ரணில் தலைமையிலான பொருளாதார சபையையும் கலைத்தார்.

பிரதமராக இருந்த ரணிலுக்கு எதிராகக் கூட்டு எதிரணி நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவருவதற்கும் மைத்திரிதான் பிள்ளையார் சுழிபோட்டார். எனினும், இறுதிநேரத்தில் பின்வாங்கினார்.

உள்ளாட்சித் தேர்தலில் ஐ.தே.கவுக்கு பெரும் பின்னடைவு ஏற்படுவதற்கும் மைத்திரியினதும், அவர்களின் சகாக்களினதும் அறிவிப்புகளே பிரதான காரணிகளாக அமைந்தன.

அதுமட்டுமல்ல ஐ.தே.கவின் முக்கிய அமைச்சரவைப் பத்திரங்களையும் தனது சகாக்களின் ஒத்து ழைப்போடு மைத்திரி நிராகரித்தார். அவ்வாறு நிராகரித்து தன்னை தேசப்பற்றாளர் என்று காட்டிக் கொண்டார்.

சாதகமான முடிவுகள் எடுக்கும்போது அதற்கு தானே தந்தை என்றும், எதிர்ப்புகள் கிளம்பும் பட்சத்தில், அப்படியொரு முடிவை தானே ஊடகங்களின் வாயிலாகத்தான் அறிந்தார் என்றும் மைத்திரி விடுத்த அறிவிப்புகளானவை ஐ.தே.கமீதான மக்களின் எதிர்ப்பை மேலும் வலுவடையச் செய்தன.

ஐ.தே.க.உறுப்பினர்களிடமிருந்து பதவிகளை பறித்தார். ரவி, விஜயதாச போன்ற மூத்த உறுப்பினர்களை ரணிலிடமிருந்து பிரித்தெடுத்தார்.

இப்படி பல விடயங்களை, சம்பவங்களை பட்டியலிட்டுக்காட்டலாம். இவை ரணிலுக்கு தெரியாமல் இல்லை. தெரிந்தும், புரிந்தும் தெரியாதவர்போலவே அவரும் நடித்தார். கட்சிக்குள்ளேயே தனக்கு கழுத்தறுப்பு நடைபெறுவதால் இறுதிவரை இதுவிடயத்தில் மௌனம் காத்தார்.

ஜனாதிபதி வேட்பாளருக்கு தான் தகுதியற்றவர் என்றால், சஜித் அல்லது கருவை களமிறக்குங்கள் என 2014 ஆம் ஆண்டே ரணில் கூறியிருந்தார். எனினும், மஹிந்த ஆதரவு அலைக்கு அஞ்சி மைத்திரியை பொதுவேட்பாளராக களமிறக்க பலதரப்பும் முடிவெடுத்தது. ரணில் அன்று ஏன் அப்படிச் சொன்னார் என்பதற்கு இன்று தெளிவான பதில் கிடைத்துள்ளது என்றே கூறவேண்டும்.

ஐ.தே.கவின் பலவீனம்

நல்லாட்சியைத் தொடர்வதற்காக ஐ.தே.க பலம் விட்டுக்கொடுப்புக்களைக் செய்திருந்ததது. ஆட்சியைத் தொடர்வதற்காகச் செய்யப்பட்ட அந்த விட்டுக் கொடுப்புகள் தான் இப்போது ஆப்பாகமாறியிருக்கின்றன.

-மைத்திரியை கௌரவப் படுத்துவதற்காக 19 ஆவது திருத்தச் சட்டத்தில் சில விட்டுக் கொடுப்புகளைச் செய்தமை.

-நூறு நாட்கள் திட்டத்தின்கீழ் முக்கிய விடயங்களை நிறைவேற்ற தவறியமை.

- போதிய ஆதாரங்கள் - குற்றச்சாட்டுகள் இருந்தும் ராஜபக்சக்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்காமை / எடுப்பதற்கு தடங்கலாக இருந்த காரணிகளை உடைத்தெறியாமை.

- பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்ட கையோடு தனியாட்சி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை.

- அரசின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் மக்கள் மத்தியில் பிரசாரம் முன்னெடுக்காமை.

- மக்களின் விழிகளுக்கு விளங்கும் வகையிலும் இதயத்துக்குப் புரியும் படியும் பொருளாதாரத் திட்டங்கள் அமுல்படுத்தாமை.

- அத்தியாவாசியப் பொருட்களின் விலைகளை அதிகரித்து மக்களின் வெறுப்பைச் சம்பாதித்தமை

- ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கடையே பரஸ்பர முரண்பாடுகள் நீடித்தமை இத்தகைய தவறுகளைச் சீர்செய்ய ஐ.தே.க மெத்தனமாக இருந்ததன் விளைவை இப்போது மொத்தமாக அனுபவிக்கிறது.

இனி என்ன?

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்கும் தரப்பே இனி ஆட்சியைத் தொடர முடியும். அதற்கான ஆதரவு ரணிலிடம் இருக்கின்றபோதிலும் - ஜனாதிபதியை பகைத்துக்கொண்டு எதுவும் செய்யமுடியாது என்பதால் தேர்தலை நடத்தி மக்களிடம் ஐ.தே.க. கருத்தறியவேண்டும்.

ஐ.தே.க. தனியாட்சி அமைத்தாலும் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பெறுவது கடினம். அப்படியானால் முக்கிய சட்டங்களை நிறைவேற்ற முடியாது. புதிய அரசியலமைப்புக்கான நடவடிக்கையும் முடங்கிவிடும்.

எனவே, அனைத்து விடயங்களையும் கருதி ஐ.தே.க. காத்திரமான முடிவை எடுக்கவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் இனிவரும் வருடங்களும் ஐ.தே.கவுக்கு அபாய வருடங்களாகவே அமையும். ■

அனுராதபுரம் அ
எல்லாளன்

லெப்.கேணல் இளங்கோ

● செந்தூரி

"எனெண்டால் இது முழுமையான ராணுவப்படைத்தளம். உங்கட உச்ச வீரத்தைக் காட்டுங்கோ! படைத்தளத்துக் குள்ள ஆரும் அதிகாரிகளின்ர குடும்பமும் - பிள்ளை யளும் சிலநேரம் நிக்கக்கூடும். சண்டையில அவைய ளுக்கு ஒண்டும் நடக்காம பத்திரமா அகற்றிப் போடுங்கோ - உங்கட பேரை நாங்கள் சொல்லத்தேவையில்லை, உலகமே உங்கட பேரை கட்டாயம் உச்சரிக்கும்": திரும்பிவர மாட்டோமென்று தெரிந்த இருபத்தியொரு உயிராயுதங்களுக்கு, அனுராதபுரம் வான்படைத்தளம் மீதான தாக்குதலுக்கு முன் னான இறுதி இராப்போசனத்தின் போது, அவர்களின் தாயாய் தந்தையாய் இருந்த தேசியத்தலைவர் சொல்லியனுப்பிய வேத வாக்கியங்கள் இவை.

தமிழீழ விடுதலைப்புலிகளின் முதலாவது வான்-தரை வழித்தாக்குதலான எல்லாளன் நடவடிக்கை, அனுராதபுரத்தில் அமைந்துள்ள இலங்கை விமானப்படையின் கட்டளைத் தலை மையகத்தையும் - தாக்குதல் மையத்துக்கான விமானப்படை கலத்தரிப்பிடங்களையும் குறிவைத்து 2007 ஒக்ரோபர் 22 அன்று நடாத்தப்பட்ட தாக்குதல்.

வன்னியின் இராணுவ முன்னரங்கிலிருந்து சுமார் 65 கி.மீற்றர்கள் தொலைவில் முழுமையான இராணுவக்கட்டுப் பாட்டில் இருந்த அனுராதபுரம் நகரின் மத்தியிலிருந்த வான் படைத்தலைமையகத்துக்குள் புகுந்து தாக்கிய கரும்புலிவீரர் களின் உயிர்த்தியாகத்தின் பலனாக - விடுதலைப்புலிகள் அமைப் பின் படைவலுச்சமநிலை ஓரிரவுக்குள் மடங்குகளாக உயர்ந்து மிளிர்ந்தது.

அப்பாவி மக்கள் மீதான சிங்களப் பேரினவாதத்தின் குரூர காழ்ப்புணர்வின் வெளிப்பாடுகளான வான்தாக்குதல்கள் மூலம் தடவைக்கு நூற்றுக்கணக்கான நிராயுதபாணிகளான தமிழ்மக்கள் வன்னிப்பகுதியில் கொல்லப்படுவது வழக்கமாயிருந்த பின்னணி யில், விமானப்படை கட்டளைத்தலைமையகம் மீதான தாக்குதலின் மூலம் பாரியளவு இராணுவத்தளபாடங்கள் அழித்தொழிக்கப் பட்டதோடு, தளத்தில் தரித்திருந்த போர்க்கலங்களான ஆயுதம் தாங்கிய விமானங்கள் அழிக்கப்பட்டமை, இலங்கை அரசின் போரியல் உளவியலை வெகுவாக சிதைத்திருந்தது.

படைவலுமீதான அழுத்தம் வெகுவாக அதிகரித்ததோடு, முன்னரங்குகளில் நிலைகொண்டிருந்த இராணுவ அணிகளும் - தளபதிகளும், விடுதலைப்புலிகளின் கரும்புலி அணிகளைச் சுற் றியதாக தங்களது மனோதிடத்தை முற்றிலும் கைநழுவிவிட நேர்ந்தது. காற்றுக்கும் அனுமதி மறுக்கப்படும் இடத்தில் - நெருப்பாகப் புகுந்து சுழன்றெரிந்த கரும்புலிகளின் மாவீரம் இன்றளவும் உயர்வுடன் நினைவேந்தப்படுகின்றது.

படையப்புலனாய்வும் லெப்.கேணல் தமிழ்மாறனும்

எல்லாளன் தாக்குதல் நடவடிக்கையின் காணொளிக் காட் சிகளை இன்றைக்கும் எங்களால் பார்க்க முடிகின்றதென்றால், அதற்கு ஒரே காரணம் வேவுப்புலி தமிழ்மாறனே! அனுராதபுரம் படைமுகாமின் வெவ்வேறு பகுதிகளுக்கும் நான்கு தடவைகள் சென்று வந்த மெல்லிய பொதுநிற சற்றே மிதப்பான பற்களையுடைய, இரவில் உலாவும் அமானுஷ்ய தேவதை அவன். ஒன்றரை வரு டங்களாக நடைபெற்ற எல்லாளன் நடவடிக் கையின் திட்டமிடலுக்கென நியமிக்கப்பட்ட நால் வரை உள்ளடக்கிய படையப்புலனாய்வு சிறப்பு அணியின் தலைவன் லெப்.கேணல் தமிழ்மாறன்.

நடவடிக்கை நடந்த அன்று இரவும் - முகா மிலிருந்து கூப்பிடு தொலைவில் இருந்தபடி தொலைத்தொடர்பு கருவிகளூடாக தாக்குதலை வன்னியின் கட்டளைப்பீடத்துக்கு நேரடி வர் ணனை செய்ததோடு காணொளிக் காட்சிகளை ஒளிப்பதிவுசெய்துகொண்டு கவனமாகத் தாய கம் திரும்பியிருந்தது வேவு அணி.

அவர்கள் கொண்டு வந்தகாணொளிக் காட்சியில் தான் - "சத்தங்களை வடிவாக் கேளுங்கோ - வடிவாக் கேளுங்கோ" என்று தமிழ்மாறனின் மென்குரலில், இருபத்தொன் மரின் தியாகத்தின் பேரோசை இந்த உலகுக்கு அறிமுகப் படுத்தப்பட்டது. படையப் புல னாய்வு சிறப்பு அணி தாக்குதலுக்கு முன்னைய எட்டு மாதங்களாக முன்னதாகவே படைத் தளத்தை கண்காணிக்கத் தொடங்கியது. ஒளிப் படங்களாகவும், காணொளிக் காட்சிகளாக வும் பதிவுசெய்யப்பட்ட தரவுகளை வைத்து அனுராதபுரம் படைத்தளத்தின் மாதிரி வரை படத்தை கச்சிதமாக உருவாக்கித்தந்தது இவ்வணி.

எங்கெங்கு முன்னரங்க காவலரண்கள் என் பது தொடங்கி, விமானங்கள் தரித்திருக்கும் இடங்கள், பொருத்தப்பட்டிருக்கும் எதிர்ப்பு ஆயுதங்களின் வகைகளும் இடங்களும் கூட குறிக்கப்பட்ட வரைபடத்தை உருவாக்கியதோடல் லாமல், தாக் குதலுக்கு இருபது நாட்களுக்கு முன்னரும் கூட படைத் தளத்தின் கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களை இறுதிசெய்ய வென புலனாய்வு பயணமொன்றை அனுராதபுரத்துக்குள் நிகழ்த்தியிருந்தார்கள் வேவுப் புலிகள்.

தாக்குதல் திட்டமிடல் - அல்லா 4 இன் 21 தீரர்கள்

'அல்லா 4' என்பது, எல்லாளன் நடவடிக்கைக்கான பெரும் பான்மையான பயிற்சிகள் நடைபெற்ற கரும்புலிகளின் பயிற்சி முகாமின் பெயர். தமிழீழ விடுதலைப்புலிகளின் போர்க்

கோசங்களில் "பயிற்சியைக் கடுமை இல குவாகச் செய்" என்பது எப்போ சரிக்கப்படுவது. புலனாய்வுத் தரவு யத்தலைவர் உள்ளிட்ட தலைமைப்ப தாக்குதல் திட்டம் படையப்புலனாய்

விதைந்தவர்களும் - வி

லெப்.கேணல் இளங்கோ (யாழ்ப்பாணம்)
லெப்.கேணல் வீமன் (திருகோணமலை)
லெப்.கேணல் மதிவதனன் (யாழ்ப்பாணம்)
கப்டன் தர்மினி(கிளிநொச்சி)
கப்டன் புரட்சி (யாழ்ப்பாணம்)
மேஜர் சுகன் (யாழ்ப்பாணம்)
மேஜர் இளம்புலி (யாழ்ப்பாணம்)
மேஜர் காவலன் (கிளிநொச்சி)
கப்டன் கருவேந்தன் (கிளிநொச்சி)
கப்டன் புகழ்மணி (யாழ்ப்பாணம்)
மேஜர் எழில் இன்பன் (யாழ்ப்பாணம்)
கப்டன் புலிமன்னன் (யாழ்ப்பாணம்)
கப்டன் அன்புக்கதிர் (முல்லைத்தீவு)
கப்டன் சுபேசன் (மன்னார்)
கப்டன் செந்தூரன் (யாழ்ப்பாணம்)
லெப்.அருண் (யாழ்ப்பாணம்)
கப்டன் பஞ்சசீலன் (மட்டக்களப்பு)
கப்டன் ஈகைப்பிரியா (யாழ்ப்பாணம்)
கப்டன் அருள்மலர் (யாழ்ப்பாணம்)
கப்டன் ஈழத்தேவன் (யாழ்ப்பாணம்)
மேஜர் கனிக்கீதன் (மட்டக்களப்பு)

களில் ஒருவரான ரெட்ணம் மாஸ்
பயிற்சிக்காகப் பொறுப்பளிக்கப்பட்ட
25 வீரர்களைக் கொண்ட உத்தேச தா
வெற்றிச்சுவையை மனக் கண்ணில் கொ
பயிற்சியில் ஈடுபட்டிருந்தார்கள்.

குறிப்பிட்ட பயிற்சியைப் பற்றியே
டங்களைப் பற்றியோ போராளிகளின்
தகவல்கள் கசிந்துவிடாதளவு இரக
பட்டுவந்தது.

அதிர்ந்த கதை
ர் : 2007

லெப்.கேணல் தமிழ்மாறன்

மையாகச் செய் - சண்டையை
ப்போதும் தொனிப்புடன் உச்
தரவுகளின் மாதிரியில், தேசி
மைப்பீடத்தினால் வகுக்கப்பட்ட
னாய்வு துறைப் பொறுப்பாளர்

விளைந்தவைகளும்

பீச் கிராவ்ட் – 200 ரக வேவு விமானம் –01
ஆளில்லா வேவு விமானங்கள் – 02
எம்.ஐ 24 ரக யுத்த உலங்குவானூர்தி – 01
எம்.ஐ.துருப்புக்காவி உலங்கு வானூர்தி – 01
கே.8 ரக அதிவேக யுத்தப் பயிற்சி
விமானங்கள் – (01 முற்றாக அழிவு, 05 பாரிய
சிதைவு)
பி.ரி. – 06 ரக சண்டைப் பயிற்சி விமானங்கள்
(04 – முற்றாக அழிவு, 03 பாரிய சிதைவு)
மில் எம்.ஐ.–24 ரக யுத்த உலங்கு வானூர்தி
– 01 (பாரிய சிதைவு)
சியாமா செட்டி ரக குண்டு வீச்சு விமானங்கள்
(04 – பாரிய சிதைவு)
மொத்தப் பெறுமதி 40 மில்லியன் அமெரிக்க
டொலர்கள்
14 – இலங்கை இராணுவத்தின் வான் படை
வீரார்கள் கொல்லப்பட்டனர்

மாஸ்டரிடம் கையளிக்கப்பட்டு
பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட
ச தாக்குதல் அணி, தாக்குதலின்
கொண்டபடி வெறித்தனமான

ற்றியோ, தாக்குதலுக்கான திட்
களின் உயர்மட்டங்களுக்குக் கூட
இரகசிய நெருக்கம் பேணப்

தாக்குதல் அணிக்கான, செயலிடப் பொறுப்பாளராக நிய
மிக்கப்பட்ட லெப்.கேணல் இளங்கோ - பயிற்சி ஆசிரியர்களுடன்
இணைந்து தானும் தாக்குதலுக்கான கட்டளைப்பயிற்சிகள்
யாவற்றிலும் ஆர்வத்துடன் ஈடுபட்டுக்கொண்டிருந்தான்.

2007 - ஒக்ரோபர் - 21 நள்ளிரவு

வில்பத்துக் காடுகளுக்கூடாக வன்னியிலிருந்து அனுராதபுரத்தை நோக்கி முன்னேறிய கரும்புலி களின் தாக்குதல் அணியை, வேவுப்புலிகளே இரக சிய வழிகளால் அழைத்துவந்து அனுராதபுர வான்படைத்தளத்துக்கு அருகிலிருக்கும் தென்னம் தோப்பொன்றில் காத்திருக்க வைத்துள்ளனர். சிரச தொலைக்காட்சியில் நடைபெற்றுக்கொண்டிருக் கும் போட்டி இசைநிகழ்ச்சி ஒன்றின் விறுவிறுப் பான நேரலை ஒளிபரப்பைக் கண்டுகளித்தபடி சிங்களதேசம் அமைதியாக இருந்தது.

அனுராதபுரம் - நெலுக்குளம் பிரதான வீதி யைக் கவனமாகக் கடந்த தாக்குதல் அணி, முகா மின் வடக்கு எல்லையிலிருந்த மூன்று முட்கம்பி வேலிகளையும் வெட்டி அகற்றி உட்புகுந்தது. அடுத்த வரிசையில் புதைக்கப்பட்டிருந்த எச்ச ரிக்கை ஒலியெழுப்பும் நிலக்கண்ணிகளையும் பாதுகாப்பாக அகற்றி பாதையைத் தயார்செய்து கொண்டு, வன்னியிலிருந்து கிடைக்கும் தாக்குதல் உத்தரவுக்காக காத்திருக்கின்றனர்.

தாக்குதல் அணி மூன்றாகப் பிரிக்கப்பட்டிருந் தது. மூன்று பேரைக்கொண்ட அணி, விமானப் படையின் முன்னரங்கப் பதுங்கு குழிகளுக்கு முன் னால் நிலையெடுத்துக் கொண்டது. படைத்தளத் தின் மையத்தை நோக்கி நகரும் ஏனைய இரு அணி களையும், முன்னரங்கப் படையினர் தாக்காமல் இருக்க இந்த ஏற்பாடு. படைத்தளத்தின் இரு நிலைகளுக்குச் செல்லவென 14 வீரர்கள் ஒரு அணியிலும் - எஞ்சிய வீரர்கள் இரண்டாம் அணி யிலும் நகர்ந்துகொண்டனர்.

இராணுவ ஆய்வாளர் இஃபால் அத்தாசின் குறிப்பொன்றின் படி, இத்தாக்குதலில் ஈடுபட்ட 6 கரும்புலி வீரர்கள் அடுத்தநாள் அதிகாலை தளத்தை விட்டு உயிருடன் வெளியேறியதாகச் சொல்லப்படு வதால் இத்தாக்குதலில் ஈடுபட்ட அணியினரின் எண்ணிக்கை 27 ஆயிருக்கலாம். படைத்தளத்துக்குள் கரும்புலிகளின் முதலாவது வேட்டொலி கேட்ட போது அதிகாலை 03 .20 - அடுத்த நாள் காலை 09.50 மணிக்குத் தாக்குதல் அணியின் இறுதிக் கரும் புலிவீரன் வீரச்சாவடையும் வரை தளம் முழுமையாக விடு தலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்தது.

தாக்குதல் அணியின் கட்டளைத் தளபதி லெப்.கேணல் இளங்கோ பதற்றமின்றி நிதானமாகக் கட்டளைகளை வழங்கிக் கொண்டிருந்தான். பிரித்தொதுக்கப்பட்ட தாக்குதல் புள்ளிகளை நிலையெடுத்துக்கொண்ட கரும்புலிகள் தமக்கான பணிகளை நிதானத்துடன் நிறைவேற்றிக்கொண்டிருந்தனர்.

ஏதோ நன்கு பழகிய நண்பனைப் போல, அனுராதபுரம் வான்படைத்தளம் கரும்புலிகளின் ஆயுதங்களுக்கு கட்டுப்பட்டு எரியத்தொடங்கியிருந்தது.வான்படைத்தளத்தின் குரூப் கப்டன் பிரியந்த குணசிங்க, வவுனியா படைத்தளத்திடம் உதவி கேட்டி ருந்தார். வவுனியாவிலிருந்து சுடுகலன்களுடன் புறப்பட்ட இலங்கை விமானப்படையின் உலங்குவானூர்தியொன்று அனு ராதபுரவை அடைவதற்குள் சுட்டுவீழ்த்தப்பட்டது.

இதற்கிடையில் வான்படைத்தளத்தின் மையத்தில் பொருத் தப்பட்ட வானெதிர்ப்பு சூடுகலன் தாங்கிய வானெதிர்ப்பு கோபுரத்தை விடுதலைப்புலிகள் கைப்பற்றி இருந்தனர். வன்னியி லிருந்து புறப்பட்ட விடுதலைப்புலிகளின் இலகுரக தாக்குதல் விமானங்கள் இரண்டு, எவ்வித எதிர்ப்புமில்லாமல் அனுராதபுரம் வரை வந்து தமக்கான இராணுவ இலக்குகளை கச்சிதமாக தாக்கியழித்துவிட்டு பாதுகாப்பாக தளம் திரும்பின.

கரும்புலிகள் மூட்டிய தீ, விமானங்களின் அதிதீவிர எரிப் பற்றுநிலையுடைய எரிபொருளின் உதவியுடன் கனன்று மூண் டெரிந்துகொண்டிருந்தது. அனுராதபுரம் ஊரடங்குச் சட்டத் தினுள் கொண்டுவரப்பட்டது.உதவிக்கு வந்த இராணுவ அணிகள் விமானப்படைத்தளத்தினுள் நுழைய முடியாதவாறு, விடுத லைப் புலிகளின் முன்னரங்க அணி தாக்குதலில் இருந்தது. வவுனியாவிலிருந்து வந்த தரைப்படை அணியின் மூன்றாவது முயற்சி காலை 7 மணிக்கும் முறியடிக்கப்பட - தளத்தினுள் தங்கியிருந்த விமானப்படை வீரர்களும் - பதவிநிலை உத்தி யோகத்தர்களும் வேறுவழியின்றி பதுங்கியிருந்து, கரும்புலி களின் சாகசங்களை வேடிக்கை பார்க்கவேண்டியிருந்தது. பகல் 10.30க்கு பிறகு தளத்தினுள் நுழைந்த இராணுவத்தினருக்கு, புகழுடன் வீழ்ந்த 20 கரும்புலிகளின் வித்துடல்களும் கிடைத் தன. அசிங்கமான இராணுவ வக்கிரம் மேலிட புலிவீரர் களின் உடலங்களை ஆடையின்றி மக்களுக்குக் காட்சிப் படுத்தி காழ்ப்புணர்வை உமிழ்ந்தது, சிங்களம்.

வடக்கின் போர்முனைக்கு இப்பால் கிட்டிய தொலை விலிருந்த அனுராதபுரம் வான்படைத்தளம் - ஆயுத, ஆள், கூட்டாதரவு, வான்வழித் தாக்குதல் வழங்கலில் முக்கியமான பொறுப்புள்ள புள்ளியாயிருந்தது. முக்கியமாக முழுமையான இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் இருந்த தளத்தின் மீதான பேரழிவுத் தாக்குதல் மூலம் கரும்புலிகள், இலங்கை அரசுக்கும் - இராணுவ அடக்குமுறைக்கும் பேரிடியான போர்ப் பாடத்தை வழங்கி ஓய்ந்தனர்.

"இலட்சியத்தினால் திடம் குவிக்கப்பட்ட போராளிகளின் மனோபலம், சகல கனரக ஆயுதங்களின் கூட்டுப்பலத்திலும் எப் போதும் மேலானது"

மொட்டக் கடிதம்



மானத்தமிழன் சிவாஜிலிங்கம் அவர்களே!

இப்படிச் சொன்னதுக்காகச் சந்தோசப்படாதையுங்கோ. மானத்தமிழனெண்டு உங்களைச் சொல்லக் காரணம் தமிழர்களுக்குச் சார்பா முந்தி நீங்கள் போட்ட (போலி) வேசங்களுக்காகத்தான். மற்றபடி நீங்கள் உள்ளுக்குள்ள பழைய ஆள்தான் எண்டது உங்களை அறியாமலே வெளிப் பட்டுள்ளது.

ஆரம்பத்தில ரெலோ நியாயமாகப் போராட வெளிக்கிட்டது என்னவோ உண்மைதான். அந்த நேரத்தில உங்களுக்கு ரெலோ எண்டாலே எழுத்துக்கூட்டத் தெரியாது. பிறகு நடந்தது என்ன? இந்தியாவின்ரை வாலைப் பிடிச்சுத் தொங்க வெளிக்கிட்டதே எல்லாப் பிரச்சினைக்கும் காரணம். கடைசியா நியாயமா, அர்ப்பணிப்போட போராடினவங்களைக் காட்டிக்குடுக்க வெளிக்கிட்டதால் பிடிச்சது சனியன். பிறகு ஐபிகேஎப் போட நீங்கள் இடுப்பில சாமானைக் கொழுவிக் கொண்டு அங்கதானே இருந்தீங்கள்?

தமிழினத் துரோகி ஜனாவைத் தலைக்கு மேலை வைச்சுக் கொண்டாடுறியள். ஜனா மட்டக்களப்பில செய்த அட்டூழியத்தை அந்தப் பக்கச் சனத்தைக் கேட்டாத் தெரியும். இப்ப அவருக்குக் கனவான் பட்டம்சூட்ட வெளிக்கிடுறியள். காகம் பாலிலை குளிச்சாலும் அன்னமாகுமோ? எல்லாம் கேடுகெட்ட பதவியாசைதான். அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் அல்லது மாகாணசபைத் தேர்தல்தான் உங்கட கள்ளநோக்கம். உப்பிடிப் போனா ஒரு பிரதேசசபை கூடக் கிடைக்காது. கஜேந்திரகுமாரைத் தாக்கிறமெண்டு உங்கட தலையிலை மண்ணை அள்ளிக் கொட்டாதையுங்கோ. அந்தாள் கொஞ்சமாவது கொள்கையோட இருக்குது. ஆனா உசார் காணாது.

அவனவன் உங்களைக் கோமாளி எண்டு சொல்லேக்குள்ள முந்தி எங்களுக்குக் கோபம் வந்தது உண்மைதான். எங்களைப் பொறுத்தவரை நீங்கள் பெரியவீரன். செயல்வீரன். உந்தாள் எப்பிடித் துணிஞ்சு அறிக்கைகள் விடுகுது? சண்டை பிடிக்குது? ஐநாவுக்கு உழைக்கப் போகுது? எண்டு அப்ப நாங்கள் யோசிக்கேல்லை. ஆனா, இப்பதானே எல்லாம் விளங்குது, மேலிடத்து சப்போட்டோடதான் எல்லாம் நடக்குது எண்டு. 'சிங்கத்தின்ர' ஆதரவிருந்தா நரி (நரிதான்) அதின்ர முதுகில ஏறிநிண்டு பிடரி மயிரைக் கடிக்குமாம்.

அங்கால ஒருபக்கம் அழிவான் சுமந்திரன்ர ஆக்கினை தாங்கேலாமக் கிடக்கு. இன்னொரு பக்கம் சம்பந்தன் எண்ட கிழவன் அறளைபேந்து புசத்துது. இப்ப என்னாவெண்டால் உங்கட சுயரூபம் கொஞ்சம் கொஞ்சமாய் வெளிக்கிடுகுது. எல்லாம் தமிழன்ர தலைவிதி. இருக்க வேண்டியவன் இல்லாமல் போட்டான். கண்டகண்ட கழிசடையெல்லாம் தங்களைத் தலைவர் எண்டு சொல்லிக்கொண்டு வெளிக்கிடுகுதுகள்.

தீருவில்ல தியாகிகளுக்கும், துரோகிகளுக்கும் பொதுத்தூபி கட்டுறதெண்டா என்ன விண்ணாணக்கதை? இனியாவது தமிழ்த் தேசியம் அது இதெண்டு பொய்வேசம் போடாதையுங்கோ. உங்களுக்கு மக்கள் ஆதரவு நல்லாக் குறைஞ்சிட்டுது. இனி ஒரு சீனி எறும்புகூட உங்களை மதிக்காது. (அதுக்காகப் புதுசா பபூன்வேலைகள் செய்ய வெளிக்கிடாதையுங்கோ. நாங்கள் நல்லாப் படிச்சிட்டம்)

ஒண்டை மட்டும் மனதிலை நினைச்சுக் கொள்ளுங்கோ. 'அவங்கள்தான்' தமிழரை ஆரெண்டு உலகத்துக்குக் காட்டினவங்கள். இருந்தாலும் இல்லாட்டிலும் அவங்கள் மட்டும்தான் எப்பவும் எங்கட பிரதிநிகள்.

இப்படிக்கு
உண்மையாவே மானமுள்ள தமிழர்கள்

என்னை விட்டால் காணும் எண்டு ஓடுவாய்..பார்?

இதுவரைக்கும் ஒண்டையும் செய்யவிடாமல் செய்தது நீ. அப்ப நீ என்ன நினைச்சாலும் செய்யலாந்தானே? ஏனென்டால் பத்தாயத்தின்ரை துறப்பை இடுப்புக்கை செருகி வைச்சுக் கொண்டு திரியிற செட்டியாற்றை மனுசி மாதிரி நீ எல்லாத்தையும் கையுக்கை வைச்சு ஆட்டிக் கொண்டு நிக்கிறது தெரியிது. வடக்கு மாகாண அரசு என்னத்தைச் சொல்லுதோ? அதைத்தான் நீ செய்திருக்க வேணும் எண்டது வழமை. ஆனால் அரசாங்கத்தின்ரை செல்வாக்கை எல்லாம் கையுக்கை வைச்சுக் கொண்டு எல்லாத்துக்கையும் மூக்கை நுழைச்சு, வடக்கு மாகாணம் செய்த எத்தினை வேலையளை நீ உன்ரை கெட்டித்தனத்தாலை நிப்பாட்டினனீ? மனச்சாட்சி இருக்கெண்டால் நெஞ்சிலை கையை வைச்சுச் சொல்லு பாப்பம்.

இஞ்சை நிண்டு லண்டனுக்குப் போய் என்ன சொன்னனீ? விக்கினேஸ்வரன் பாட்டி ஐஞ்சு வருசத்திலை செய்யாததை எல்லாம் நான் ஒரு வருசத்திலை செய்வன் எண்டு. என்ன? செய்யலாந்தானே. ஒண்டையும் தரவிடாமல் தடுத்தது நீ. அப்ப நீ நினைச்சால் எல்லாம் நடக்குமேல்லே? நீயும் மைத்திரியும் என்ன வேறை வேறையே? ஒண்டெல்லே? அவர் நினைக்கிறதும் நீ நினைக்கிறதும் இரண்டும் எங்கடை ஆக்களுக்கு ஒத்துப்போகாத விசியம்.எல்லாம் எங்களுக்கு நேர்மாறுதானே? உதை இஞ்சை உள்ள குழந்தையிட்டை "குரே மாமா ஆர்?" எண்டு கேட்டால் "அது மைத்திரியி மாமான்ரை கைப்பிள்ளை" எண்டு பதில் சொல்லும். அந்தளவுக்கு இப்ப வடக்கின்ரை அரசியல் எல்லாருக்கும் அத்துபடி.

நீ லண்டனிலை சொன்னதை வைச்சுச் சொல்லுறன். எங்களுக்குப் பெரிய விளையாட்டுக் காட்டப்போறாய் எண்டது விளங்குது. சனம் மூக்கிலை கைவைச்சு அதிசயிக்கிறமாதிரி உடனை சில அலுவல் நடக்கும். சனமும் குரே எங்கடை கடவுள் மாதிரி எண்டும் சொல்லும். ஆனால் எங்கடை சனத்தைக் குரேக்கு வடிவாத் தெரியாது. இந்தியன் ஆமி வரேக்கையும் மாலைபோட்டு வர வேற்றவை. பிறகு விளக்குமாத்தாலை அடிக்காத குறையாக் கப்பல் ஏத்தினவை. டக்கருக்கும் கிக்கர் போட்டுக் காட்டினவை. அது குரேக்கு வடிவா விளங்கினால் சரி.

எங்கடை தலைவிதி ஒவ்வொண்டுக்கும் சண்டை பிடிச்சுச் சண்டை பிடிச்சுச் சீவியத்தைக் கொண்டு போறமாதிரித்தான் அமைப்பிருக்கு. குரேயைச் சமாளிக்கலாம். அவரைச் சுத்தி நிக்கிற எங்கடையள்தானே சரியான அதிகுதியள். அவருக்குத் தெரியாத வித்தையள் எல்லாத்தையும் அந்தாளுக்குக் காட்டிக் குடுத்து தங்கடை வயிற்றை வளர்க்கிறதுகள். ஏதோ பாப்பம் என்ன நடக்கப்போகுதெண்டு?

• வில்லங்கம் விநாசி

‘திருவாசக அரண்மனை’ பரிசளிப்பு நிகழ்வு

முன்னர் ஆட்சிக்காலத்தில் சமூகப்பொறுப்புள்ள பல விடயங்கள் கோயில்களுக்கூடாகவும் அவை சார்ந்த சமூக நிறுவனங் களுக்கூடாகவுமே அதிகம் நடைமுறைப்படுத்தப்பட்டன. விசேடமாக கல்விசார்ந்த நடவடிக்கைகள் எல்லாம் கோயிலோடு சார்ந்தே பயணித் திருக்கின்றன. அந்தவகையில் தற்போது அறநெறிப் பாடசாலைகள் மட்டுமே கோயில் சார்ந்து நடைபெறுகின்றதொரு கல்வி முயற்சி எனலாம். ஒரு சமூகத்தை மதச்சார்புள்ள நடவடிக்கைகளோடு ஒன்றி ணைக்க இவை மட்டும் போதாது. வேறுவிதமான பல விடயங்களும் திட்டமிடப்பட வேண்டும். ஒரு சமூகத்தின் பண்பாட்டோடு கோயில் நடவடிக்கைகளும் பின்னிப்பிணைந்திருந்தால் மட்டுமே அவற்றால் சமூகத்துக்குப் பலனளிக்க முடியும்.

அந்தவகையில் இந்துமதத்தின் முக்கியமான பொக்கிஷம் எனப் போற்றப்படும் திருவாசகத்துக்கு அரண்மனை அமைத்துத் தந்த சிவபூமி அறக்கட்டளையுடன் எதிரொலி வாரமலர் இணைந்து , திருவாசக அரண்மனை தொடர்பானதொரு வினா விடைப் போட்டியை நடத்தியது. அதில் வெற்றிபெற்ற ஐவருக்குக் கடந்த சனிக்கிழமை நாவற்குழி – திருவாசக அரண்மனையில் வைத்துச் சான்றிதழ் மற்றும் பணப் பரிசில்கள் என்பன வழங்கப்பட்டன. இவ்வரும் காலத்தில் இது போன்ற பலவிதமான முயற்சிகளை எதிரொலி தொடர்ந்தும் முன் னெடுக்க உள்ளமை குறிப்பிடத்தக்கது.

தடகளன்

விடைபெறும் தருணமல்ல!

2011ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதியாட்டத்தில் இலங்கையை இந்திய அணி வென்று சம் பியனாகிய நிகழ்வு நம்மால் மறக்க முடி யாத ஒன்று. அதே தொடரில் இந்திய அணி யின் சகலதுறை வீரராக இருந்து தொட ரின் நாயகனாகப் பிரகாசித்த யுவராஜ் சிங்கையும் மறக்க முடியாது.

அதேவேளை, அந்தத் தொடர் முடிந்த சிறிய கால இடைவெளிக்குள், யுவராஜ் புற்று நோயால் பாதிக்கப்பட்டு அமெரிக்க வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, கரும் போராட்டத்துக்கு மத்தி யில் மீண்டு வந்தார். அந்தக் கால கட்டத்தில் யுவராஜ் சிங் புற்றுநோய்க்குட்பட்டமை ரசிகர் களைப் பெரும் கவலைக்குள் ஆழ்த்தியிருந் தது குறிப்பிடத்தக்கது.

இதேபோன்றதொரு நிலைமை மல்யுத்த வீரர் ஒருவருக்கு தற்போது ஏற்பட்டுள்ளமை பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

உலகத் தொழில்முறை மல்யுத்தக் குடும்பத் தில், 1985ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் திகதி பிறந்தார் ரோமன் ரெய்ன்ஸ்.

அமெரிக்கரான இவர், 2010ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 19ஆம் திகதி மல்யுத்தக் களத்தில் அதிரடியாகக் களமிறங்கினார்.

WWE Raw மற்றும் Smack Down போன்ற நிகழ்ச்சிகளில் தோன்றும் மல்யுத்த நட்சத்திரங்களில் முன்னணி வீரராகத் திகழ்கி றார். ரோமன் ரெய்ன்ஸ், பல தடவைகள் சம்பியன் பட்டங்களை வென்று சாதனை படைத்ததுடன், தற்போதும் உலக மல்யுத்த விளையாட்டான WWE இன் உலக சம்பிய னாக உள்ளார்.

திருமணமாகி 3 குழந்தைகளின் தந்தையாக வுள்ள ரோமன் ரெய்ன்ஸுக்கு தற்போது வயது 33.

இவருக்கு 23 வயதிருக்கும்போது (2008), லுகிமியா எனும் இரத்தம் – எலும்பு புற்று நோயால் பாதிக்கப்பட்டார். அன்று தொடக்கும் அதற்கான மருந்துகளை உட்கொள்ளத் தொடங் கினார். எனினும், திடமாக இருந்த அவர் நோய் தாக்கிய இரண்டு வருடங்களில் (2010) உலகப் போட்டிகளில் பங்கேற்கத் தொடங்கி னார். பின்னர் படிப்படியாக உயர்ந்து பெரும் உச்சத்தை எட்டியுள்ள தற்போதைய நிலை யில், அவரைத் தொற்றிய நோயும் உச்சத்தை அடைந்துள்ளது.

இதுகுறித்த அறிவிப்பை அவர் அண்மை யில் வெளியிட்டார். அப்போது கருத்து வெளி யிட்ட அவர்,

“நான் இனிமேல் சம்பியனாக இருக்க முடி யாது. நீங்கள் யாரும் எனக்காக வருத்தப்பட வேண்டாம். எனக்கு நம்பிக்கை இருக்கிறது. இது நான் ஓய்வு பெறும் பேச்சு அல்ல. நான் நிச்சயம் மீண்டு வருவேன்.” என்றார்.

பலமுறை சம்பியன் பட்டங்களை வென்று முன்னணியில் இருக்கும் ரோமன் ரெய்ன்ஸின் இந்த அறிவிப்பு அவரது ரசிகர்களுக்கு அதிர்ச் சியை ஏற்படுத்தியுள்ளது.

உலக விளையாட்டுப் போட்டிகளிலேயே மிகவும் மோசமான – முரட்டுத்தமான விளையாட் டாகக் கூறப்படுவது மல்யுத்தம். இந்தப் போட்டிகளில் பங்கேற்கும் ஒவ்வொரு நட்சத் திரங்களும் உயிரைப் பணயம் வைத்து மன – உடல் தைரியத்துடன் களமிறங்குவர். தம் முடன் போட்டி போடும் ஒவ்வொரு போட்டியாள ரையும் மூர்க்கத்தனமாகத் தாக்கி அவர்களை வீழ்த்துவதிலேயே அவர்கள் வெற்றியைக் காணமுடியும்.

இப்போட்டிகளில் பங்கேற்கும் வீரர்களை மிகவும் பயத்துடன் – மிருகங்களுக்கு ஒப்பா கப் பார்ப்பதே வழமை. ஆனாலும், அவர்களுக் கென கோடிக்கணக்கில் ரசிகர்கள் இல்லாமல் இல்லை.

இத்தகைய ரசிகர்கள் கூட்டத்தைத் தன் வசப்படுத்திய ரோமன் மீது வெறியாக உள்ள வர்களை மாத்திரமின்றி, சாதாரண விளை யாட்டு ரசிகனையும் அவர் மீது திரும்பிப் பார்க்க வைத்து, அவர் சுகம் பெற பிரார்த்தனை வரை கொண்டு சென்று விட்டுள்ளது. இதுதான் விளையாட்டுகளின் ஆத்மார்த்தமான தன்மை.



சிறப்பு சித்திரவதை முகாம்

20

தோழர் பாலன்

முகாமில் இருக்கும் மற்ற அகதிகளுடன் பேசுவதற்குக் கூட எனக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இங்கு நடக்கும் இக் கொடுமைகள் குறித்து உயர் அதிகாரிகளிடம் முறையிட்டோம். தொடர்ந்து 14 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தோம். எமக்கு இழைக்கப்படும் இக் கொடுமைகளை தடுத்து நிறுத்தக் கோரி பிரதமர், முதலமைச்சர், உயர் நீதி மன்ற தலைமை நீதிபதி, தலைமைச் செயலர், மாவட்ட ஆட்சித் தலைவர், ஆகியோருக்குத் தமிழ்நாடு இளைஞர் பேரவை, மக்கள் உரிமைக் கழகம், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ராமதாஸ் ஆகியோர் தந்தி கொடுத்துள்ளனர். ஆனால் எவ்வித பயனும் இல்லை. மாறாக எனது மனைவி பிள்ளைகளின் படங்கள் பறித்துக் கிழிக்கப்பட்டன. எனது உடுப்புகள் செருப்புகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. இது குறித்து நியாயங் கேட்டால் இங்குள்ள பொலிஸ் அதிகாரிகள் எங்களைப் பார்த்து "தேவடியா மகனே, மயிராண்டி சிங்கள வனுக்குப் பிறந்தவனே" என்று சர்வ சாதாரணமாக ஏசுவார்கள். ஏன் எங்கள் தாயை அசிங்கப் படுத்துகிறீர்கள்? என்று கேட்டால் அடி. உதை விழும்.

இவ்வாறுதான் 21-12-1993 அன்று உதவி ஆய்வாளர் அன்பழகன் தலைமையில் வெறிபிடித்த பொலீசார் கும்பலாக சேர்ந்து என்னைத் தாக்கியதில் என் கால் முறிந்தது. என்னை மட்டுமல்ல அன்று முகாமில் பலரை இவ்வாறு அடித்து துன்புறுத்தினார்கள்., அவர்கள் எவ்வாறு சித்திரவதை செய்தனர் என்பதை கூறுவதற்கு என் நாக்கு கூசுகின்றது. அந்தளவு கேவலமாக கொடுமை செய்தனர். கால் முறிந்து நடக்க முடியாமல் நான் வேதனைப் பட்ட போதும், மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லவில்லை. மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றால் தமது அராஜகம் வெளி உலகத்திற்கு தெரிந்து விடும் என்ற பயத்தில் ஈவு இரக்கமின்றி அப்படியே கிடக்க விட்டனர். இன்றும் கூட என் கால்கள் அடிக்கடி வலிக்கின்றன.

எமக்கு இழைக்கப்படும் கொடுமைகள் நாஜிகளின் சித்திரவதை முகாம்களில் நடந்தவையை விடக் கொடியவை. இவை யாவும் அரசுக்கு தெரிந்தே உயர் அதிகாரிகளினால் நடத்தப்படுகின்றன இவ்வளவு திமிராகவும், பொறுப்பற்ற முறையிலும் இவ்வதிகாரிகள் நடந்து கொள்வதற்கு அரசே பொறுப்பாகும். எனவே இவ் அராஜகங்களுக்கு இந்திய அரசும், தமிழ்நாடு அரசின் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களும் என்றாவது ஒரு நாள் பதில் சொல்லியே ஆக வேண்டும்.

கல் ஒன்றைத் தூக்கி தன் காலில் போடுவது என்பது குறிப்பிட்ட சில முட்டாள்களின் செயல்களை வர்ணிப்பதற்கு சீன மக்கள் பயன்படுத்தும் ஒரு முதுமொழி. சகல நாட்டு பிற்போக்குவாதிகளும் இத்தகைய முட்டாள்களே. புரட்சிகரப் போராளிகளுக்கு எதிரான அவர்களின் அடக்கு முறைகள் அனைத்தும் இறுதியாக ஆராய்ந்து பார்த்தால் மக்களின் புரட்சிகளை பரந்த அளவில் மேலும் தீவிரமான அளவில் வளர்ப்பதற்கு துணை செய்வதாகவே அமைகின்றன. இதேபோல் இலங்கை இந்திய அரசுகள் எம்மீது மேற்கொள்ளும் அடக்குமுறைகள் யாவும் தமிழ் ஈழ மக்களின் விடுதலைக்கு உறுதுணையாகவே இறுதியில் அமையும். எம்மை பிடித்து அடைத்து சித்திரவதை செய்வதன் மூலமோ அல்லது எம்மைக் கொன்று குவிப்பதன் மூலமோ ஈழப் போராட்டத்தை நசுக்கிவிட முடியும் என இந்திய அரசு காணும் கனவு ஒருபோதும் நிறைவேறப் போவதில்லை.

ஏனெனில், நாம் புதைக்கப்படுபவர்கள் அல்ல. விதைக்கப்படுபவர்கள். எம்மில் இருந்து ஆயிரமாயிரமாய் முளைத்தெழுவர். துண்டு துண்டாய் எம்மை வெட்டி எறிந்தாலும் பொங்கும் அலையாய் மீண்டும் மீண்டும் எழுந்து வருவோம். இறுதி வெற்றி உறுதி எமக்கு.

மேலும் நீதிபதி அவர்களே உங்களிடம் ஒரு பணிவான வேண்டுகோள் விடுக்கிறேன். இவ் அராஜகவாதிகளால் நான் படுகொலை செய்யப்படலாம். அவ்வாறு நான் மரணமடைய நேரிட்டால் எனது கண்களை தமிழ் நாட்டில் யாராவது ஏழைத் தமிழ் சிறுமிக்கு வழங்க வேண்டும். அத்துடன் எனது உடலை தமிழ் நாட்டில் உள்ள ஏதாவது ஒரு மருத்துவ பல்கலைக்கழகத்துக்கு ஒப்படைக்க வேண்டும் இதுவே எனது கடைசி விருப்பமாகும்.

"வீழ்வது நாமாக இருப்பினும்
வாழ்வது தமிழாக இருக்கட்டும்!;;

நன்றி இப்படிக்கு
சிவா

[சித்திரவதை தொடரும்]

இந்த வாரம் உங்களுக்கு...

மேடம்

முதுகுக்குப் பின்னால் செயற்படும் எதிரிகளிடம் உஷாராக இருங்கள். வேலை, தொழில் செய்யும் இடங்களில் அக்கம் பக்கம் பார்த்துப் பேசுங்கள். யாரையுமே இந்த வாரம் நம்ப வேண்டாம். வார ஆரம்பத்தில் நடக்கும் சில எதிரான விஷயங்களால் நம்பிக்கை இழப்பது போன்று தெரிந்தாலும் உடனடியாக நிதானித்துக் கொண்டு வென்று காட்டுவீர்கள். உங்களுடைய மனோதைரியம் கூடுதலாகும். எத்தகைய பிரச்சினைகளையும் சுலபமாகச் சமாளிப்பீர்கள்.தந்தை வழியில் எல்லா வகையான ஆதரவுகளும் கிடைக்கும்.

கடகம்

உங்களில் சிலருக்கு இதுவரை இருந்து வந்த கடன், நோய், எதிரி தொந்தரவுகள் அனைத்தும் சாதகமாக மாறித் தீர்வுக்கு வரும் வாரம் இது. இளைஞர்களுக்கும், மாணவர்களுக்கும் எதிர்பாலினர் மீது ஈர்ப்பு ஏற்படும் கால கட்டம் நடைபெறுகிறது. காதல் விவகாரங்களில் சிக்குவீர்கள். வீடு வாங்குவதற்கு, புது வீடு கட்டுவதற்கு இருந்த சிக்கல்கள் இனிமேல் இருக்காது. நல்ல வீட்டில் குடிபோவீர்கள். வேலை, தொழில், வியாபாரம் போன்ற ஜீவன அமைப்புகளில் நல்லவைகள் நடக்கும்.

துலாம்

சிக்கல்களுக்கு தீர்வுகள் வரும் வாரம் இது. புதிதாக எந்தச் சிக்கல்களும் வராது. எவருக்கும் வாக்குக் கொடுக்கவேண்டாம். என்ன பிரச்சினைகள் இருந்தாலும் பணத்துக்குத் தட்டுப்பாடு இருக்காது. எல்லாவற்றையும் உங்களால் சமாளிக்க முடியும். தடைப்பட்டிருந்த யோக அமைப்புகள் மற்றும் இதுவரை கிடைக்காமல் போன பாக்கியங்கள் அனைத்தும் இனிமேல் கிடைக்கும். தடைகள் அனைத்தையும் வெற்றிகரமாக சமாளிப்பீர்கள். இதுவரை எந்த விஷயத்திலும் தடைகளைச் சந்தித்தவர்கள் நன்மைகள் நடப்பதை உணருவீர்கள்.

மகரம்

ஏழரைச் சனி நடந்து கொண்டிருப்பதால் யாரையும் நம்பி அதிகமான பண முதலீடு செய்வது கூடாது. இளைஞர்கள் புதிதாகத் தொழில் ஆரம்பிப்பதோ, இருக்கும் தொழிலை விரிவாக்கம் செய்வதோ எதுவாயினும் ஒரு முறைக்கு நான்கு முறை நன்கு யோசித்துச் செய்ய வேண்டும். புதியமுயற்சிகள் இப்போது கை கொடுக்காது. எவரையும் நம்ப வேண்டாம். இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறீர்களோ அதையே கண்ணும் கருத்துமாக திறம்பட செய்வது நல்லது. வெளிநாடு சம்மந்தப்பட்ட விஷயங்கள் யோகம் தரும்.

இடபம்

எதிலும் நேர்வழியில் செல்லுங்கள். குறுக்கு வழி வேண்டாம். அரச ஊழியர்கள் வருமானத்துக்குமேல் ஆசைப்பட்டு விதிகளை மீறியாருக்கும் சலுகை காட்ட வேண்டாம். மேலதிகாரிகளுக்குத் தெரியாமல், அவர்களின் எழுத்துப் பூர்வமான அனுமதி இல்லாமல் எதுவும் செய்யாதீர்கள். பின்னால் தொந்தரவுகள் வருவதற்கு வாய்ப்புகள் உள்ளன. செலவுகளைச் சுருக்க வேண்டியது அவசியம். வீண் செலவுகள் செய்யாதீர்கள்.சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் சாதகமற்ற பலன்களிலிருந்து மீண்டு வருவீர்கள்.

சிம்மம்

உங்களில் சிலர் குழப்பமான மனநிலையில் இருப்பீர்கள். சிலருக்குக் கடன் தொல்லைகளோ, எதிரி தொந்தரவோ, ஆரோக்கியக் குறைவுகளோ இருக்கும். எதுவானாலும் இரண்டு வாரங்களில் அனைத்தும் சரியாகும். கடன் வாங்கி வீடு வாங்கும் யோகம் இருக்கிறது. தாயார் சம்பந்தமாக செலவுகள் ஏற்படும். வியாபாரம் முன்னேறும்.

பிள்ளைகள் விஷயத்தில் மகிழ்ச்சியான சம்பவங்கள் இருக்கும். நிறைவேறாமல் இருக்கும் நியாயமான விஷயங்கள் நிறைவேறும்.

விருச்சிகம்

வாரம் முழுவதும் சந்திரன் நல்ல நிலையில் இருப்பதால், இனி உங்களுக்குத் தன்னம்பிக்கை பிறக்கும். நல்ல செயல் திறனுடன் இருப்பீர்கள். கடந்த காலங்களில் உங்களுக்கு ஏற்பட்ட துன்பங்கள் அனைத்தையும் அனுபவங்களாக ஏற்றுக் கொண்டு இனிமேல் எதையும் சுலபமாகச் சமாளிப்பீர்கள். எதிலும் சீக்கிரமாக நல்ல முடிவு எடுப்பீர்கள். இதுவரை இருந்துவந்த தடை இனி நீங்கும். கடவுள் அருள் உங்கள் புக்கம் உண்டு.

கும்பம்

மனக்கலக்கம் எதுவும் உங்களுக்கு இருக்காது. சிலருக்குத் தொழில் துறையில் நன்மைகள் நடக்கும். பரபரப்பாக இருப்பீர்கள். தகப்பனார் உடல் நிலையில் கவனம் செலுத்துங்கள் எதிர்பாராத இடத்திலிருந்து ஆதரவு கிடைக்கும். நீண்டகாலப் பகை ஒன்று தீர்ந்து சமரசம் ஆவீர்கள். இளைய பருவத்தினர் சிலர் எதிர்மறை பலன்களால் தன்னம்பிக்கையின்றி இருப்பீர்கள். அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டுவது போல ஏதேனும் நல்ல நிகழ்ச்சிகள் உண்டு. சிலருக்கு இருந்து வந்த கடன் தொல்லைகள் நீங்கும்.

மிதுனம்

பெண்கள் மூலமான மன வருத்தங்களும் செலவுகளும் உள்ள வாரம் இது. அது சுபச் செலவா? அல்லது வீண் செலவா? என்பது உங்களுடைய பிறந்த சாதக அமைப்பைப் பொறுத்தது. பொதுவாக இது மிதுனத்துக்கு நல்ல பலன்கள் நடக்கும் வாரம்தான். சிலருக்கு தொழில், வேலை அமைப்புகளில் இருந்து வந்த தடைகள் விலகி நன்மைகள் நடக்கும். சுயதொழில், வியாபாரம் போன்றவைகளை நடத்துவோருக்கு நல்ல பலன்கள் உண்டு.

கன்னி

துன்பங்கள் தீரும் வாரம் இது. இதுவரை சொந்தவீடு இல்லாதவர்களுக்கு, வீடு அமைவதற்கான ஆரம்பக் கட்ட நிகழ்வுகள் நடந்தேறும் சிலருக்கு சிந்தனை முழுவதும் சொந்த வீட்டைப் பற்றியே சுற்றிச் சுற்றி வரும். சமாளிக்க முடியாமல் இருந்தவைகளை இனிமேல் சமாளிக்க முடியும். நண்பர்களாக இருப்பவர்கள் விரோதிகளாக மாறுவது, எதிரி என்றும் தெரிந்தும் ஒன்றும் செய்ய முடியாமல் அவருடனேயே இருக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

தனுசு

புதிய தொழில் எதையும் தொடங்காமல் இருப்பது நல்லது. உங்களில் பூராடம் நட்சத்திரக்காரர்களின் மனம் எதிலும் நிலை கொள்ளாமல் சரியான முடிவுகள் எடுக்கத் தடுமாறும். ராசிநாதன் வலிமையிழந்த நிலையில் இருப்பதால் தனுசு ராசிக்காரர்களின் எண்ணங்கள் யாவும் தடையாகும் வாரம் இது. ஏற்கனவே தாயை இழந்து தந்தையை மட்டும் கொண்டவர்கள் அவரது ஆரோக்கியத்தில் அக்கறையுடன் இருக்க வேண்டும்.

மீனம்

மீன ராசியினருக்கு எல்லாமே சுபமாக முடியக்கூடிய காலகட்டம் கூடி வந்திருப்பதால், இதுவரை நடக்காமல் இருந்த அனைத்து நல்ல விஷயங்களும் இப்போது நடக்கும். கடந்த காலங்களில் எதுவுமே கைவரப் பெறாமல் நிம்மதியில்லாத சூழலில் இருந்து வந்த நீங்கள் அனைத்தும் மாறி நன்மைகள் நடக்கப் போவதை உணர்வீர்கள். உங்கள் செயல்களில் புத்துணர்ச்சியும், புதுமையும், விவேகமும் இருக்கும்.

நடியா முராத்; போராட்டமே உன் பெயர்!

பத்தொன்பது வயதான பூஞ்சிட்டான நடியா, தன் சின்ன உலகத்தில் மகிழ்ச்சியோடு பறந்து திரிந்து கொண்டிருந்தாள். 2014 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 15ஆம் திகதி அவளது மகிழ்ச்சியை மட்டுமல்ல வாழ்க்கையையும் புரட்டிப் போட்ட நாளாக அமைந்தது.

இஸ்லாமிய அரசை அமைக்க வன் முறையில் நாசம் புரியும் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் நடியா வசித்துவந்த கோஜோ என்னும் கிராமத்துக்குள் கத்தி, துப்பாக்கிகளோடு புயலெனப் புகுந்தார்கள். அந்தக் கிராமத்தில் வாழ்ந்தவர்கள் விவசாயத்தை நம்பியிருந்த யாசிதி இனத்தைச் சேர்ந்த சிறுபான்மையினர்.

ஊரில் உள்ள அனைவரையும் அங்கிருந்த பள்ளியில் கூடுமாறு சொன்னார்கள். கூடியவர்களில் ஆண்களைத் தனியாகவும், பெண்களைத் தனியாகவும் பிரித்து அழைத்துச் சென்றார்கள் ஐ.எஸ். தீவிரவாதிகள். கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் துப்பாக்கி வேட்டுக்கள் முழங்கின. 600 பேரைத் துடிக்கத் துடிக்கச் சுட்டுக் கொன்றார்கள் பயங்கரவாதிகள்.

நடியாவின் தாய் உட்பட அவளது ஆறு சகோதரர்களும் மண்ணில் பிணமாய்க் கிடந்தார்கள். அங்கிருந்த சிறுமிகள், இளம்பெண்கள் அனைவரையும் பாலியல் அடிமைகளாகக் கடத்திக்கொண்டு போனார்கள் அந்தக் கொடியவர்கள்.

மொசூல் நகரில் உள்ள வதை முகாமில் அடைக்கப் பட்டபோது, அங்கிருந்த 6,700 பேரில் ஒருத்தியானாள் நடியா. அனைவரும் அந்தக் கொடிய மிருகங்களால் வன்புணர்வுக் குள்ளானார்கள். மிகவும் வக்கிரமாக வெளியே சொல்லமுடியாத அளவுக்கு மிகக் கேவலமாகத் தங்கள் பாலியல் இச்சைகளைத் தீர்த்துக்கொண்டார்கள் அந்த ஐ.எஸ். அநியாயக்காரர்கள்.

தொடர்ச்சியாகப் பல மிருகங்களால் வேட்டையாடப்பட்டதில் பல பெண்கள் மயங்கியே கிடந்தார்கள். குற்றுயிரும் குலை யுயிருமாகக் கிடந்த பெண்களை சந்தை களிலும், சமூக ஊடகங்களிலும் ஏலம் விட்டார்கள். ஆடு, மாடுகளைப் போல் இழுந்து வந்து சந்தையில் பரப்பி ஆண் களுக்குக் காட்சிப் பொருளாக்கி விலை பேசினார்கள்.

அழகாய் இருந்தால்தானே இந்தக் காமப் பிசாசுகள் ஏலம் எடுப்பார்கள். ஆகவே அதிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக பெட்ரி அசிட்டால் தங்கள் முகத்தைத் தேய்த்து அகோரமாக்கிக் கொண்டும், தலை முடியைப் பேய் போல் கலைத்து விட்டுக் கொண்டும் பார்ப்ப தற்கு அசிங்கமாக நின்றவர்களை, அந்தத் துப்பாக்கிதாரிகள் முகங்களைக் கழுவித் தலையை வலுக்கட்டாயமாகச் சீவ வைத்து ஏலம் விட அழைத்துச் சென்றார்கள்.

இப்படி அழைத்துச் செல்லப்பட்ட போது சில பெண்கள் பாலங்களிலிருந்து குதித்து தற்கொலை செய்துகொண்டார் கள். பலர் மணிக்கட்டு நரம்புகளை அறுத்து உயிரைப் போக்கிக் கொண்டார்கள்.

நடியா அடைத்து வைக்கப்பட்டிருந்த வீட்டின் மாடி அறை முழுவதும் இரத்தம் திட்டுத் திட்டாகக் காய்ந்தும், காயாமலும் சிதறிக்கிடந்தது. நடியா வேதனையாலும் வலியாலும் துடித்துக்கொண்டிருந்தாளே தவிர, தற்கொலை செய்துகொள்ள விரும்ப வில்லை. காரணம் இந்தக் கொடுமையி லிருந்து தப்பிக்க நேர்ந்தால்.... இந்த அநி யாயங்களை உலகுக்குச் சொல்ல ஒரு சந் தர்ப்பம் கிடைக்கலாம். இல்லை அவர்களா கவே என்னைக் கொலை செய்யட்டும் என்று தன் சாவுக்காகக் காத்திருந்தாள். ஆனால், அவளுக்கு மரணம் வரவில்லை. தன் உடல் பசிக்கு உணவாக ஐ.எஸ். காமுகன் ஒருவனால் வாங்கப்பட்ட நடியா அவனது வீட்டில் சிறைவைக்கப்பட்டாள்.

(வருவாள்)

கவிஞர் பிரேம்ராஜ், கொழும்பு

நம்பிக்கையை உடைத்தவன்!

ரௌத்திரம் பழகு

நான் அரச பணி செய்பவள். எனக்கு வயது இப்போது 52. எனது கணவர் தற் போது உயிருடன் இல்லை.

திருமணமாகியும் எங்களுக்குப் பிள்ளை கள் இல்லை. எனது கணவர் ஒரு குடி காரர். என்னைப் பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் திருமணம் செய்தவர். என் கண வருக்கு ஒரு நண்பர் உள்ளார். இரண்டு பேரும் கோயிலோடு அப்படி நெருக்கம். 'வைரவர் எது செய்தாலும் பொறுப்பார்' என்ற நம்பிக்கை இருவருக்கும் இருந்தபடி யால், எனது கணவர் ஒவ்வொரு நாளும் கோயிலுக்குப் போய் வந்த பிறகு குடிப் பார். அவ்வளவுதான். ஆனால், நண்பர் குடிப்பதேயில்லை.

காரணம் அவரது வீடு கோயிலுக்குப் பக்கத்தில் உள்ளது. எனது கணவர் கட னுக்குக் குடிப்பவர். மாத முடிவில் சம் பளத்தோடு கடன் தீர்ப்பார். இவரது பல வீனம் தெரிந்து இவரது நண்பர் இடை யிடையே கொஞ்சம் காசு கொடுப்பார்.

அதை முழுவதும் குடித்துவிட்டு வீட் டுக்கு வருவார். அதேவேளை எனது கண வரின் நண்பருக்கு எனது வீட்டுக்கு வந்து போக நெடுநாளாக ஆசை ஏற்பட்டிருக்க வேண்டும். காரணம் என்னைப் பார்த் துப் பசியாறியவர்கள் பல பேர். இவரும் ஒருவர் என்று எனக்குப் பின்னர்தான் புரிந்தது.

அந்த நண்பர் எனது வீட்டுக்கு வரு வதற்காக எனது கணவருக்குக் குடிப் பதற்குப் பணம் கொடுப்பார் போலும். வர வர கணவரின் நிலைமை மோசமாகி யது. காலப்போக்கில் அந்த நண்பரே கணவரை வீட்டுக்குக் கூட்டி வந்து என் னிடம் ஒப்படைப்பார். அது யுத்த காலம். ஒருநாள் எனது கணவரைக் கொண்டு வந்து வீட்டில் விடும்போது, ஊரடங்குச் சட்டம் போட்டுவிட்டனர். கணவர் நல்ல குடிபோதையில் படுத்துவிட்டார். ஊரடங்குச் சட்டம் என்பதால் அந்த நண் பரும் எனது வீட்டிலேயே தங்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

வீதி முழுவதும் அமைதி. இரவு ஒன் பது மணியிருக்கும் எனக்குப் பயமாக இருந்தது. "நீங்கள் நித்திரை கொள்ளுங்கோ. நான் விறாந்தையில் படுக்கிறன்" என்று சொல்லி விட்டு நண்பர் வெளியில் படுத் துக் கொண்டார். நானும் சரி என்று சொல்லிவிட்டு எனது அறையில் தூங்கி விட்டேன். எனது அறைக்கதவைப் பூட்ட வில்லை. ஏனென்றால், எனது கணவர் எழும்பி வருவார். ஆனால், நடந்ததோ வேறு. இரவு நடுநிசி இருக்கும். ஒரு புதிய தொடுகை என்னை விழித்தெழச் செய்தது. திடுக்கிட்டு எழுந்தேன். வளவு முழுக்க அவர்கள் நிற்கிறார்கள் என்று நண்பர் சொல்லவும் நான் பயத்தில் சத்தம் போடாமல் இருந்துவிட்டேன். இதனைப் பயன்படுத்திக்கொண்ட என் கணவரின் நண்பர், முழுமையாக என்னை அனுப வித்தே விட்டார். வளவுக்குள் நின்றவர் கள் திடீரென வீட்டுக்குள் நுழைந்து கொண்டனர்.

அதன் பின்னர் எனது கணவரின் நண் பரை அவர்கள் அடித்து, உதைத்து துன் புறுத்தினர். பின்னர் அவரை 'கேம்புக்கு' இழுத்துச் சென்றனர். இது அவருக்கு உரிய தண்டனைதான், காரணம் நண் பரின் மனைவியை பலாத்காரம் செய்த வராயிற்றே.

எனது கணவரிடம் நான் நடந்ததைச் சொல்லவேயில்லை. அதே நண்பர் இப் போது ஒரு தலைவராக இருக்கிறார்.

செய்யும் துரோகங்களைச் செய்து விட்டு, கோயிலில் போய் நின்றால் பாவ மன்னிப்புக் கிடைக்கும் என்று எண்ணு கிற சமூகம் தோன்றிவிட்டது. இப்போ தும் கூட அவருக்குச் சலன புத்தி விட்டபாடில்லை.

அன்புச் சகோதரிகளே! பெண்களை அனுபவிக்கும் பொருளாகவே எல்லோ ரும் பார்க்கிறார்கள். வீட்டுக்குள்ளும் சரி வெளியிலும் சரி எச்சரிக்கையாக இருங்கள். படலையோடு அனுப்ப வேண் டியவர்களை வீட்டுக்குள் எடுக்காதீர்கள். அவர்கள் பாராட்டுவார்கள். மயங்கிவிடா தீர்கள்.

நா. விகிதாஜினி, யாழ்ப்பாணம்



பாலியல் தொல்லைகளை பகிரங்கம் செய்வோம்

உங்கள் இரகசியம் காக்கப்படும். நீங்கள் சந்தித்த பாலியல்சார் பிரச்சி னைகளையும் அதைக் கையாண்ட விதத்தையும் எழுதுங்கள். உங்கள் அனுபவம் பல பெண்களைப் பாதிப் புறாமல் காக்கட்டும்.

'ரௌத்திரம் பழகு'
அம்பலம் பதிப்பகம்,
இல. 241,
கைதடி – மானிப்பாய் வீதி,
உடுவில், யாழ்ப்பாணம்.
அல்லது
ethirolimedia@gmail.com

ஹைஹீல்ஸ் அணிபவரா?

அழகாகவும் கம்பீரமாகவும் தோற்றமளிக்க வேண்டும், நவீன பெண்ணாக எல்லோரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதே தற்கால பெண்களின் சிந்தனை யாக இருக்கிறது. அதில் பெண் களின் முதல் தெரிவு ஹைஹீல்ஸ் எனப்படும் குதிக்கால் செருப்பு களே.

குதிக்கால் செருப்புகளை அணி வதால் பெண்களுக்கு மூட்டு வலி, இடுப்பு வலி, குதிக்கால் வலி போன்றவை ஏற்படும். தொடர்ந்து அணிவதால் உடல் உறுப்புகளின் ஒவ்வொரு இணைப் புக்கும் பாதிப்பு நேரும் என்று சமீபத்திய ஆய்வு தெரிவிக்கிறது.

எலும்பு இணைப்புகளில் வீக் கம் ஏற்பட்டு வலி, வேதனையை உண்டாக்கும் நரம்புகள் சுளுக்கி, வீக்கம் தோன்றும். குறிப்பாகப் பெண்களுக்கு கர்ப்பப்பை பாதிப் புகளும் ஏற்படும்.

அழகை விடவும் உடல் ஆரோக்கியம் மிக முக்கியம் அல் லவா. உஷார் பெண்களே!

கனக்கப்படிச்சா உப்பிடித்தான்!

● நவீன சவாரித்தம்பர்

நன்மையான விசயமானாலும் சரி, தீமையான விசயமானாலும்சரி எதுவும் ஒரு அளவோடைதான் நிக்கவேணும். செய்ய வேணும். இல்லாட்டி நாலு பேர் நாலு விதமாய் கதைச்சு நாறடிச்சு விடுவினம் பாருங்கோ.கனக்கப் படிச்ச ஆக்களையெல்லாம் நாங்கள் அறிவாளியெண்டு சொல்லுறம். இப்பிடிப் படிச்ச ஆக்களுக்கு மதிப்பு, மரியாதை குடுக்கவேணுமெண்டும் சொல்லுறம். சரி! சொல்லுறவை சொல்லிப்போட்டுப் போகட்டும். இப்ப அதாலை ஒரு பிரச்சினையும் இல்லை. ஆனா, இப்பிடிக் கனக்கப் படிச்சாலும் கரைச்சல் தானெண்டு இதிலை சொல்ல வாறன். ஏனெண்டால் பாருங்கோ... அவையள் படிக்கிற படிப்புக்கும் செய்யிற செய்கை காரியங்களுக்கும் எதுவித சம்பந்தமும் இல்லாமல்போனா, அந்தப் படிப்பாலை என்ன பிரயோசனம்? ஒருவன் படிக்கவெண்டு வெளிக்கிடுகிறது... படிக்கிறவன் நாலு விசயங்களை, நாட்டு நடப்புகளை அறியிறதுக்கும், படிச்ச படிப் பின்படி ஒழுகி நடக்கிறதுக்கும், தான் சார்ந்த சமூகத்துக்கும் பிர யோசனப்பட வேணுமெண்டதுக்காகத்தான் கண்டியோ! இந்தப் படிப்பு வந்து அடுத்தவனுக்கு உதவி செய்யாட்டிலும் பரவா யில்லை. உபத்திரவப்படுத்தாமல் இருந்தால், அதுவே பெரிய காரியம் பாருங்கோ!

சில மனிசற்றை படிப்பு... அந்தப் படிப்புக்கேற்ற மாதிரி அவை யளை வழி நடத்திக்கொண்டு போகும். வேறை சிலபேற்றைப் படிப்பு... வெறும் நடிப்பு மாதிரிக் காட்டிவிட்டுப் போய்விடும். உங்கினேக்கை அரசாங்க உத்தியோகத்தர்மார் சிலர் தங்கட ஒவ்வீசுக்குள்ளை பொதுச்சனத்தோடை நடத்துற 'நாய்கடி' செயலுகளைப் பார்க்கேக்கை அவையள் போட்டிருக்கிற காற் சட்டை சேட்டின்ரை பெறுமானப் படிப்பு எப்படிப் பட்டதெண்டு தெரியவரும்.

அறிவு வளருறதெண்டது வெறும் பாடப் புத்தகங்களை மட்டும் விரிச்சுப் படிச்சாப்போலை வாறதில்லைப் பாருங்கோ. அனுபவங் களும் ஒரு படிப்புத்தான். இந்த அனுபவப் படிப்பெண்டது சில இடங்களில அறிவை விருத்தி செய்யிறதுக்கும் வழிவகுக்கும். அவ மானப்பட்டுப் போறதுக்கும் வழி திறக்கும். உப்பிடி அனுபவங்களை நான் என்ரை வாழ்க்கையில கண்ணுக்கு முன்னாலை கண்டு களிச்சவன் கண்டியளே.அது ஒண்டில்லை, ரண்டில்லை. கனக்கப் பாருங்கோ.

அதில இப்ப ஒண்டைச் சொல்ல வாறன். ஒரு இடத்திலை மூத்த எழுத்தாளர் ஒருத்தருடைய தாய் மனிசி செத்து, அஞ்சாம் நாள், ஒருத்தர் துக்கம் விசாரிக்கிற சாட்டில அங்கைபோய் என்ன செய்தவரெண்டது தெரியுமே! இதொரு வெக்கம் கெட்ட கதை. வெளியிலை சொல்லிப் போடாதையுங்கோ. பெரிய பரிசுகேடாப் போயிடும்.

செத்த வீட்டிலை தாய் செத்த கவலையில மூத்த எழுத்தாளர் மூக்கையுறிஞ்சி அழுதுகொண்டிருக்க, தன்னையொரு உசந்த படிப்புப் படிச்சதாக ஊர் முழுக்கப் பறைதட்டிக் கொண்டு திரிந்த பன்னாடை ஒண்டு, கவலையில இருந்த அந்த எழுத்தாளரை ஆற்றுப்படுத்தியிருக்க வேணும். அதைவிட்டுப்போட்டு, அந்த மனிசன் என்ன செய்துதெண்டால், தான் வெளியிட்டு வீட்டிலை விலை போகாமல் கிடந்த ஏதோ சமயப் புத்தகங்கள் ரண்டை அந்த தாளிட்டை குடுத்திருக்கு.

மெய்யே! தெரியாமல்தான் கேட்கிறன். படிச்சிருக்கிறது பெரிய உசத்தியான பண்டிதர் எண்ட படிப்பு.

அதுக்குள்ளை சைவப் புலவர் பட்டம் வேறை. இந்த லட் சணத்தில ஒரு இழவு வீட்டில எப்பிடி நடந்துகொள்ள வேணு மெண்டது தெரியாத உதுகளுக்கெல்லாம் என்ன கண்டறியாத உசத்தியான படிப்புகளும் பட் டங்களும்? நான் இதில முன் னைக்குச் சொன்னமாதிரி, சில மனிசருக்குப் படிப்புக் கூடினால் இப்பிடித்தான். அங்கோடை, மந் திகை ஆஸ்பத்திரியளை மனசுக்குள்ளை கொண்டு வந்து விட்டிட்டு நிக்குங்கள்.

சரி நான் விசயத்துக்கு வாறன். தாய் செத்த கவலையில இருந்த அந்த மூத்த எழுத்தாளருக்கு, பண்டிதர் புத்தகத்தை நீட்டினதும், என்ன செய்யிறதெண்டே தெரியாமல் தவிச்சது மனிசன். வாங்காட்டி வீடு தேடிவந்த மெத்தப் படிச்ச மனிசனோடு வீணாக மனம்முறிய வேண்டிவருமே...எண்ட ஆதங்கத்தில, அந் தாள் புத்தகத்தை வாங்கிக்கொண்டு, பிறகு அந்த மெத்தப் படிச்ச மனிசன் எழும்பிப் போகேக்கை, புத்தகத்தின்ரை காசைக்குடுத்து அனுப்பி வைச்சார்.

பண்டிதர் செத்தவீட்டுக்கு வந்தது கவலையைப் பகிர்ந்து கொள்ளுறதுக்கு அல்ல.வீட்டில விலைபோகாமல் கிடந்த தன்ர புத்தகங்களை வித்துத் தள்ளுறதுக்கு. இது என்ன நாகரிகமும் நாசமறுந்த படிப்பும் எண்டது எனக்கு ஒண்டுமா விளங்குதில்லைப் பாருங்கோ. ஒருபொது இடத்தில, அதுவும் செத்த வீட்டில எப்பிடி அங்குள்ள ஆக்களோடை நடந்து கொள்ளவேணுமெண்டது கொஞ்சம் கூடத்தெரியாத இப்படிப்பட்ட கனக்கப் படிச்ச மனி சரைவிட, கள்ளுச்சாராயம் குடிச்சுப்போட்டு, றோட்டுகள், தெருவு களில 'செந்தமிழ்' மொழியில பாட்டுகள் பாடிக்கொண்டு போற படிக்காத, பள்ளிக்கூடம் போகாத அடிமட்டக் குடிமகன் எவ் வளவோ உசந்த மனிசன் இல்லையா.

■

"ஓப்பிரேஷன் விக்னேஸ்வரன்"
கூட்டமைப்புக்கு குலைப்பன்

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

அது கூட்டமைப்பின் தீர்மானிக்கும் சக்தியாக மாறிக் கொண்டிருக்கும் தனக்கும், தன் அரசியல் இருப்புக்கும் ஆபத்தாக மாறிவிடும்" எனச் சுமந்திரன் கணக்குப் போட்டுப் பார்த்திருக்க வேண்டும். அத்தோடு மாவை. சேனாதிராசா அதிகப்படியாக உணர்ச்சி அரசியலுக்கு முன்னுரிமை கொடுக்கும் ஒருவர் என்பதால், இவ்வளவு கஷ்டப்பட்டு நிகழ்த்திக் கொண்டிருந்த 'புலிநீக்க' அரசியலுக்கு மாறாகவும் நடக்கக் கூடும் என்ற சந்தேகத்தையும், கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தரிடம் கொளுத்திப் போட்டார் சுமந் திரன். அந்த வெடி குறி பிசகாமல் வெடித்தது. முதலமைச்சர் கனவில் உறங்கிக் கொண்டிருந்த மாவையைத் தட்டி யெழுப்பி, "முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன் தான் முத லமைச்சர் வேட்பாளர்" என்று சொல்லி, மாவையின் கனவில் மண்ணள்ளிப் போடப்பட்டது.

ஆனால் மாவை அதை அவ்வளவு சுலபமாக விடுவதாக இல்லை. அவருடைய ஆதரவாளர்கள் தலைமையின் தன்னிச் சையான முடிவுக்கு எதிராகப் போராட்டங்களில் ஈடுபடவும் துணிந்தார்கள். இது குறித்த பகிரங்க ஊடக அறிக்கைகளும் வெளியிடப்பட்டன. யாழ்ப்பாணம் வரவிருந்த கூட்டமைப் பின் தலைவர் சம்பந்தனுக்குக் கறுப்புக் கொடி காட்டவும் ஏற்பாடுகள் நடந்தன. இவற்றுக்கெல்லாம் மாவை சேனா திராசாவின் மறைமுக ஆதரவிருந்தபோதும், இறுதியில் சம்பந்தன் - சுமந்திரன் இணை மேற்கொண்ட சமாளிப்பு களால் மாவையும் மனம் மாறி விக்னேஸ்வரனுக்கு வழிவிட்டார்.

இத்தனை காலமும் கட்சிக்காக உழைத்த, மக்கள் செல் வாக்குள்ள மாவையை விடுத்து கொழும்பில் வசித்து வந்த முன்னாள் நீதியரசரை 'ரெடிமெட் முதலமைச்சராக' வடக் கில் சம்பந்தரும் , சுமந்திரனும் ஏன் களமிறக்க வேண்டும்? "முதலமைச்சர் பதவி மிக முக்கியமான ஒரு இராஜங்கப் பதவி. பல வெளிநாட்டுப் பிரதிநிதிகளைச் சந்திக்க வேண் டியிருக்கும். ஆனால் அப்படி அவர்களிடம் சரளமாக உரை யாடக்கூடிய 'நுனிநாக்கு' ஆங்கிலப் புலமை மாவை.சேனா திராசாவுக்கு இல்லை. வடக்கு மாகாண சபை இப்போது தான் முதன்முதலாக கூடவுள்ளது. எனவே பல நியதிச் சட்டங்களை உருவாக்குதல் உள்ளிட்ட சட்டத்துறை சார்ந்த சிக்கல்கள் முதலமைச்சராக வரப்போவருக்கு இருக்கும். அதனால்தான் மெத்தப்படித்த நீதியரசரை முதலமைச்சர் வேட்பாளராக்கினோம்" என்று கட்சியினரை அடித்து' அமத்தி' விட்டார்கள் சம்பந்தரும் சுமந்திரனும். ஆனால் விக்னேஸ்வரனைக் களமிறக்கிய உண்மைக் காரணம் வேறு.

"விக்னேஸ்வரன் இலங்கையின் நீதித்துறைக்கு மாறாக நடக்காத ஒருவர். எனவே அவர் இலங்கை அரசின் மனம் கோணாதவகையில், உணர்ச்சி அரசியலை விடுத்து, தமிழின நலன் என்பதைக் கடந்து இலங்கையின் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப வளைந்து கொடுப்பார். ஆன்மீக நாட்டம் கொண்ட விக்னேஸ்வரன் எந்தக் காலத்திலும் அரசியல் தொல்லையாக மாறமாட்டார். கொழும்பிலேயே வசித்து வந்ததால் தமிழ்த் தேசிய ஆதரவு, புலிகள் சார்பு என்று போக மாட்டார். இதனால் புலிநீக்க அரசியலுக்கு எவ்வித பாதிப்பும் வரப் போவதில்லை. மஹிந்தவோடு கூட்டு வைத்துள்ள வாசுதேவ நாணயக்காரவின் சம்பந்தி என்பதால், தெற்கு அரசின் விருப்பப்படியே விக்னேஸ்வரனின் அரசியல் இருக்கும். எனவே அவரை 'டம்மியாக' வைத்துக் கொண்டு நாங்கள் நினைத்தமாதிரி காய்களை நகர்த்தலாம்" என்பதே சுமந்திரன் - சம்பந்தர் கூட்டணியின் திட்டம்.

ஆரம்பத்தில் எல்லாம் திட்டப்படியே தான் நடந்தது. மாகாணசபைத் தேர்தல் காலத்தில் முதலமைச்சர் வேட் பாளரான விக்னேஸ்வரனை விடவும், விடுதலைப்புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்த எழிலனின் மனைவியான அனந்திக்கே மக்களிடையே அதிக ஆதரவு இருந்தது. இது ஒவ்வொரு பிரசாரக் கூட்டங்களிலும் எதிரொலித்தது. விக்னேஸ்வரனை விடவும் அனந்திக்கு அதிக வாக்குகள் கிடைத்துவிட்டால், முதல மைச்சர் வேட்பாளர் என்ற தகுதிநிலை அடிபட்டுப் போய் விடும் என்பதால், அடிமட்டம் வரை இறங்கி என்ன வெல்லாம் செய்ய முடியுமோ அவ்வளவற்றையும் செய்து ஒருமாதிரி ஒரு இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளோடு விக்னேஸ்வரனைக் கூட்டமைப்பு முதலமைச்சர் நாற் காலியில் உட்கார வைத்து அழகு பார்த்தது. விக்னேஸ் வரனும் தன்னைத் தெரிவு செய்தவர்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்து செய்வதைப் போல, அப்போதைய ஜனாதிபதி மஹிந்தவுக்கு முன்னால் பதவிப்பிரமாணம் செய்து கொள்ள, கூட்டமைப்பின் தலைமைக்கு அவ்வளவு ஆனந்தம்,. தங்கள் தெரிவு தாம் நினைத்த பாதையில் பயணிப்பது அவர்களுக்கு உவப்பாகத்தானே இருக்கும். ஆனால் அந்த எதிர்பார்ப் பெல்லாம் அடுத்தடுத்த நிகழ்வுகளால் பூமராங் போல கூட் டமைப்புக்கே உலை வைக்கத் தொடங்கியது. என்னவெல் லாம் விக்னேஸ்வரன் செய்யமாட்டார் என கூட்டமைப்பின் தலைமை நம்பியதோ, அவற்றையெல்லாம் சொல்லிவைத்தாற் போல ஒன்றும் விடாமல் செய்யத் தொடங்கினார் விக் னேஸ்வரன்.

(ஒப்பிரேஷன் அடுத்த வாரம்)

சம்பந்தர் என்ன செய்ய வேண்டும்?

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

"தமிழர் தரப்பின் நியாயபூர்வமான கோரிக்கைகளும் அபிலாஷைகளும் யுத்தம் முடிந்து இதுநாள்வரைக்கும் முழுமையாக செவிசாய்க்கப்படாத ஒரு நிலையில் – தமிழர் தரப்பு தென்னிலங்கை தரப்புக்குத் தொடர்ந்தும் நிபந்தனையற்ற ஆதரவைக் கொடுத்து கொடுத்து களைத்துப்போயுள்ள நிலையில் – தமிழர் தரப்பினை சிங்களத்தரப்பு தொடர்ந்தும் எடுப்பார் கைப்பிள்ளையாக பயன்படுத்துவதற்கு துணிந்திருக்கும் நிலையில் –

நாங்கள் "X" என்ற தரப்புக்கு (அது கூட்டமைப்பு முடிவெடுக்கும் தரப்புக்கு) எமது ஆதரவை வழங்குவதற்கு முடிவெடுத்திருக்கிறோம். ஆனால், ஆறு மாத காலத்தில் நாங்கள் முன்வைக்கும் கோரிக்கைகளை ஆளப்போகும் அரசு தீர்த்துவைக்காவிட்டால், அரசுக்கான எங்களது ஆதரவை நாங்கள் வாபஸ் பெறுவோம். ஆட்சி கவிழும். நாடு தேர்தலுக்குப் போகும்"

ஆட்சி கவிழ்ந்து நாடு தேர்தலுக்குப் போனாலும்கூட சம்பந்தரின் இந்த அறிவிப்பினால் புத்துயிர் பெற்ற தமிழ் மக்கள் மீண்டும் தமிழர் தரப்பை தீர்மானிக்கும் சக்தியா கவே பதவிக்கு கொண்டுவருவர். சிங்களத்தரப்பு திரும்ப வும்கூட ஒடி ஒளிந்துவிடமுடியாத நிலைக்குள் அகப்படும்.

இந்த முடிவைத் தமிழர் தரப்பு எடுத்துக்கொண்டால் –

1) தமிழர் தரப்பின் ஒற்றுமையை – ஒட்டுமொத்தக் குரலை வெளிக்காண்பித்ததாக அமையும்.

2) தென்னிலங்கையில் தற்போது ஏற்பட்டிருக்கும் குழப்பத்தில் 'தவிச்ச முயல் அடித்த கதையாக' தமிழர்களும் பொறுப்பற்ற வகையில் நடந்துகொள்ளாமல், அரசியல் முதிர்ச்சியோடு நடந்துகொண்ட உதாரணமாக அமையும்.

3) சிங்கள மக்களுக்கு மாத்திரமல்லாமல், சர்வதேச சமூகத்துக்கும் மிகத்தெளிவானதொரு செய்தியைக் கூறு வதற்குரிய நல்ல சந்தர்ப்பமாக தற்போதைய சூழலை மாற்றியமைக்க முடியும்.

4) சம்பந்தர் இவ்வளவு காலமும் கடந்துவந்த பொறுமைக்கு ஒரு நியாயத்தைக்கூற முடியும்.

இவை எதுவும் வேண்டாம். வரப்போகும் தேர்தல்க ளுக்கு எமக்கெல்லாம் யார் காசு தரப்போகிறார்கள். பிரசார பணத்தை இப்படியான தருணங்களில்தானே உழைத்துச் சம்பாதிக்கமுடியும் என்ற நோக்கத்துடன், பெட்டிகளை வாங்கிக்கொள்வதில் தொடையைத் தட்டிக் கொண்டு வரிசையில் ஓடிப்போய் நிற்க விரும்பினால் அதுவே நம் தலைவிதி என்று நொந்துகொள்ளவேண் டியதுதான்.

■

கேள்வி – கைப்புள்ள நீர் ராமாயணம் படித்திருக்கிறீரா? அதில் எந்தக் கதாபாத்திரம் உம்மைக் கவர்ந்தது? தசரதனா அல்லது இராமனா?

எஸ்.கஜி, நல்லூர்

பதில் - அப்பனுக்கு ஆயிரம் மனைவிகள். எந்தப் பிரச்சினையும் இல்லை. மகனுக்கு ஒரே ஒரு மனைவி. ஆயிரம் பிரச்சினை. இப்ப சொல்லுங்க யார் பெட்டர்?

கேள்வி – நான் காதலித்த பெண், என்னைக் கழற்றி விட்டுப் போய்விட்டாள். கவலையில் துடிக்கிறேன். என்ன செய்ய?

ஜே.தீபன், பதுளை

பதில் - எத்தனை பொண்ணுங்க விட்டுட்டுப் போனாலும் கவலைப்படக் கூடாது. எடிசனுக்குக் கூட ஆயிரம் தடவ முயற்சி பண்ணியும் கடைசியா கிடைச்சது 'பல்பு'தான்.

கேள்வி – 'உனக்கு இரண்டு கண்ணும் நல்லாத்தானே இருக்கு. ஒழுங்கா அரசியலில் இருந்து கல்லப் பொறுக்க மாட்டியா?' என்று தினம் என்னைத் திட்டுகிறார் என் வீட்டுக்காரர். திட்டு வாங்காமலிருக்க என்ன செய்யலாம்?

வி.வினோஜினி, வவுனியா

பதில் - உங்கட 32 பல்லும் நல்லாத்தானே இருக்கு. இரண்டு, மூன்று கல்லைக் கடிச்சு சாப்பிட முடியாதா? என்று கேட்டுப்பாருங்க.... மூச்சு விடமாட்டார்.

கேள்வி – என் மனைவி வாரத்தில மூன்று நாளைக்கு சமையலறைப் பக்கமே போக மாட்டேன் என்கிறாளே?

வ.சிவரூபன், நீர்கொழும்பு

பதில் - வீட்ல Cook பண்ணி சாப்பிடுறவங்கள விட Book பண்ணிச் சாப்பிடுறவங்க அதிகமாச்சு. நீயும் கொஞ்சம் புரிஞ்சுக்கோ...

கேள்வி – உன் பதில்களைப் பார்க்கும்போது வாழ்க்கையில ரொம்ப அடி வாங்கியிருப்ப போல இருக்கு. உனக்குக் கடவுள் நம்பிக்கை இருக்கா?

என்.நிரோசன், கொட்டாஞ்சேனை

பதில் - "மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்" என்பதைக் கேள்விப்பட்டதும் இருந்த கொஞ்ச, நஞ்ச கடவுள் நம்பிக்கையும் அலுத்துக் கிட்டுப் போச்சு.

கேள்வி – பெண்களின் இடையை அப்படி வர்ணிக்கிறார்களே? இடை வல்லினமா, மெல்லினமா?

எம்.பிரவீன், சாவகச்சேரி

பதில் - 40 வயதுக்கு மேல் வல்லினம்.

சொல்லுங்கோ டொக்டர்?

டொக்டர்
எம்.கே. முருகானந்தன்
(குடும்ப மருத்துவர்)

அழகா? ஆபத்தா?

நான் மூக்குத்தி குத்தி 2 மாதங்கள் ஆகின்றன டொக்டர். ஆனால் குத்திய இடத்தில் ஏற்பட்ட புண் இன்னும் ஆற வில்லை. இதற்கு என்ன செய்யலாம்?

கங்கா சுரேஸ்,
கொழும்பு

பதில்:- உங்களுக்கு மூக்குக் குத்தியது யார்? குத்தியவர் சுகாதார முறைப்படி குத்தினாரா என்பது எனது எதிர்க் கேள்வியாக இருக்கும்.ஏனெனில் மூக்குக் குத்திய இடத்தில் புண் என்றால் பெரும்பாலும் கிருமித் தொற்றாகவே இருக்க வேண்டும். மூக்குக் குத்தியபோது சுகாதார முறைப்படி குத்தாவிட்டால், அதாவது குத்தியவரின் கைகளில் இருந்தோ, உங்கள் மூக்கில் இருந்தோ அல்லது மூக்குத்தியில் இருந்தோ கிருமி பரவியிருக்கலாம்.

கிருமித் தொற்றெனில் மூக்குக் குத்திய இடத்தில் சற்றே வீக்கத்துடன் வலியும் இருக்கும். கை பட்டால் அல்லது அவ்விடம் தட்டுப் பட்டால் வலி அதிகமாகும். அவ்விடம் சற்று செம்மை பூத்திருக்கவும் கூடும். சில வேளைகளில் அவ்வித்திலிருந்து சற்று சீழ் வடியவும் கூடும். ஆறாத புண்ணால் மூக்குக் குத்திய இடத்தில் சற்று சதை வளரவும் கூடும். சதை அதிகம் வளர்ந்தால் மூக்குத்தி அதனுள் புதைந்து விடவும் கூடும். புண்ணைச் சுத்தமாக வைத்திருந்தால் விரைவில் குணமடையும்.

தினமும் 4-5 தடவைகள் புண்ணைக் கழுவுங்கள். சவர்க்காரம் போட்டுக் கழுவுவதைவிட உப்புத் தண்ணீரால் கழுவுவது நல்லது. ஸ்பிரிட், ஹைரஜன் பெரோக்சைட் (Hydrogen peroxide) போன்றவற்றைச் சுத்தம் செய்யப் பயன்படுத்த வேண்டாம். புண் ஆறாமல் இருக்கும். ஒவ்வாமையால் ஏற்பட்ட புண் என்றால் வலி அதிகமாக இருக்காது. ஆனால் சற்று நமைச்சல் இருக்கலாம். இதற்குக் காரணம் மூக்குத்தியில் உள்ள உலோகப் பொருள் உங்களுக்கு ஏற்படுத்தும் ஒவ்வாமையே ஆகும். சுத்தமான பொன்னுக்கு ஒவ்வாமை ஏற்படுவது குறைவு. ஆனால் சுத்தமான பொன்னால் நகைகள் செய்ய முடியாது. ஏனெனில் அவை உறுதியாக இருக்காது. எனவே நிக்கல் (Nickel) போன்ற வேறு சில உலோகங்களையும் கலந்தே நகை செய்வார்கள். அவற்றுக்கு ஒவ்வாமை ஏற்படுவது அதிகம். கவரிங் நகை எனில் ஒவ்வாமை ஏற்படுவதற்கான வாய்ப்பு மிக அதிகமாகும்.

உங்களது புண் ஒவ்வாமையால் ஏற்பட்டது எனில் மூக்குத்தியை அகற்றிவிட புண் ஆறிவிடும். ஆனால் மீண்டும் போடக் கூடாது.

வேறொரு பிரச்சினையும்உள்ளது. மூக்குத்தியை எந்த இடத்தில் குத்தியிருக்கிறீர்கள் என்பதாகும். மூக்குத் துவாரங்களுக்கு இடையேயுள்ள தடுப்பு சுவரில் குத்தியிருக்கிறீர்களா? மூக்கின் தடுப்பு சுவரின் அடிப்பகுதி மாத்திரம் தசை சவ்வுகளால்ஆனது. அதற்கு மேலே உள்ள பகுதியில் குருத்தெலும்பு உள்ளது. அதில் குத்தியிருந்தால் அதில் கடுமையான குருத்தெலும்பு கிருமித் தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் மூக்கின் மூக்கின் தடுப்புச் சுவர் (Perichondritis and necrosis of nasal wall) சிதைந்து மூக்கின் அமைப்பையே மாற்றிவிடக் கூடியளவு ஆபத்தானது. ஆனால், உங்கள் பிரச்சினை அது அல்ல என ஊகிக்க முடிகிறது. ■

வீட்டில் வெட்டியாக இருந்து எதிரொலியை வாசித்து விட்டு, மூகட்டைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா? இப்படி இருக்கும் போது உங்கள் மூளைக்குள் குறுகுறுவென்று ஏதேதோ கேள்விகளெல்லாம் எழுமே. எல்லாவற்றையும் உடனே எழுதி அனுப்புங்கள். எங்கள் கைப்பிள்ளை தன் பாணியில் அவற்றுக் கெல்லாம் பதில் சொல்லி உங்களைக் கலகலப்பூட்டக் காத்திருக்கிறார். ம்ம்..! கேள்விகள் புறப்படட்டும்!!!

மருத்துவ ரீதியாக உங்களுக்கு எழும் சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள். அவை தொடர்பில் உரிய மருத்துவர்களின் பதில்கள் எதிரொலியில் பிரசுரமாகும். உங்கள் சுய விபரம் இரகசியமாகப் பேணப்பட வேண்டுமாயின் அதனை மறக்காமல் குறிப்பிடுங்கள். நோயற்ற வாழ்வுக்கு கேளுங்கள். பதிலோடு பயனும் பெறுங்கள்.

மன்னிக்க முடியாத அவலங்கள்!

● எஸ்.சுமன்

இந்திய உச்ச நீதிமன்றத்தில் சட்டப் பிரிவு 377 தொடர்பான தீர்ப்பின்போது, நீதிபதி இந்து மல்கோத்ரா, "தன்பாலின ஈர்ப்பாளர்களிடம், வரலாறு மன்னிப்பு கேட்டுக்கொள்கிறது" என்றார். ஆனால், வரலாறு முழுக்க தன்பாலின ஈர்ப்பைக் குறிவைத்து மன்னிக்க முடியாத அவலங்கள் அரங்கேறி இருக்கின்றன. அப்படியான ஒன்றைத் திரைப்படமாகப் பதிவு செய்திருக்கிறது 'போய் எரேஸ்ட்'.

தீவிர இறை நம்பிக்கை கொண்ட குடும்பத்தில் பிறந்த சிறுவன் ஒருவன், கல்லூரி செல்லும் வயதில் தனது பாலின ஈர்ப்பின் தடுமாற்றத்தை ஒருவாறாக அடையாளம் காணுகிறான். அதை வீட்டில் வெளிப்படையாகச் சொல்லும்போது குடும்பத்தினர் அதிர்ச்சியடைகின்றனர். தேவாலயத்தின் ஆதரவில் நடத்தப்படும் 'சிகிச்சை முகாம்' ஒன்றுக்கு அவன் அனுப்பப்படுகிறான்.

பாலின ஈர்ப்பில் 'பிறழ்வு' கண்ட இளைஞர்களைத் திருத்த இறைபோதனையும், மனோதத்துவமும் கலந்த கடும் பயிற்சிகள் அங்கே வழங்கப்படுகின்றன. இவ்வாறு சிகிச்சைக்குப் பணிக்கப்பட்ட ஜரார்ட் கான்லி என்பவர், தனது அனுபவத்தை 'போய் எரேஸ்ட்' என்ற தலைப்பில் எழுதிய புத்தகம் பலத்த விவாதங்களை எழுப்பியது. இவரது வாழ்க்கைப் புத்தகத்தைத் தழுவி அதே தலைப்பிலான திரைப்படம் தற்போது உருவாகி இருக்கிறது.

தன் பாலின ஈர்ப்பை மையமாக வைத்து, குடும்பம், சமூகம், உறவுகள் மத்தியிலான உருக்கம், இறை நம்பிக்கை, எனப் பலவற்றையும் இப்படத்தின் கதை அலசுகிறது. பாலினத் தடுமாற்றத்துக்கு ஆளாகும் இளைஞராக லுகாஸ் ஹெட்ஜஸ் நடித்துள்ளார். திரைக்கதையை வடிவமைத்து, தயாரிப்பில் பங்கேற்றதுடன் படத்தை இயக்கியுள்ளார் ஜோயல் எட்ஜர்டன்.

தன்பாலின ஈர்ப்பைக் 'குணப்படுத்தும்' சிகிச்சையாளராக வரும் இவருக்கும் பாதிக்கப்பட்ட இளைஞனுக்கும் இடையேயான உரையாடல்களும் விவாதங்களுமே படத்தின் மையம். மகன் மீதான பாசத்துக்கும், மத நம்பிக்கைகளுக்கும் இடையே அல்லாடும் பெற்றோராக, ரஸல் க்ரோ மற்றும் நிகோல் கிட்மேன் நடித்துள்ளனர்.

மீ டூவைப் பேசும் குருபீடமும் கம்பளிப்பூச்சியும்

'கம்பளிப்பூச்சி' என்றொரு குறும்படம் மே மாதம் வெளியானது. மூன்றரை நிமிடத்தில் முகத்தில் அறையும் நிஜத்தைக் கதையோட்டமாகக் கொண்ட இந்தக் குறும்படம், பெரும் வரவேற்பையும் விருதையும் பெற்றது.

யூ -டியூபில் இன்றைக்கும் புதிய பார்வையாளர்களை ஈர்த்துக் கொண்டிருக்கிறது.

மீ டு பிரசாரத்தை மையமாகக் கொண்ட 'கம்பளிப்பூச்சி' குறும்படம், சிறப்பான நடிகர்கள் மற்றும் சிறப்பான ஆக்கத்துக்காகப் பாராட்டுகளையும் பெற்று வருகிறது. ஆனால், குறும்படம் வெளியான போதே தனது 'குருபீடம்' சிறுகதை, உரிய அனுமதி இன்றி குறும்படமாகி இருப்பதாக சிறுகதையின் ஆசிரியர் ஜா.தீபா சமூக ஊடகம் வாயிலாகத் தனது ஆதங்கத்தைப் பதிவு செய்திருந்தார்.

இது தொடர்பான குற்றச்சாட்டுக்கு 'கம்பளிப்பூச்சி' குறும்பட்க் குழுவின் சார்பில் அப்போதே மறுப்பு தெரிவித்திருந்தனர். ஆனால், வாசகர்களும், குறும்பட ரசிகர்களும் படைப்பாளிகளைவிடத் தெளிவாக இருக்கிறார்கள். யூ-டியூபில் கம்பளிப்பூச்சிக் குறும்படத்துக்கான பின்னூட்டம் இடுவோரில் பலரும் 'குருபீடம்' சிறுகதையைக் குறிப்பிட்டே, அதன் குறும்பட வடிவம் சிறப்பாக இருப்பதாகப் பாராட்டுவதில் இருந்து இதனைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

மிக சுமாரான அடிதடி சினிமா!

● முரளிதரன் காசிவிஸ்வநாதன்

2005 ஆம் ஆண்டில் விஷால் - ராஜ்கிரண் - லிங்குசாமி கூட்டணியில் வெளிவந்த சண்டக் கோழிப் படத்தின் இரண்டாம் பாகம் அல்லது தொடர்ச்சி என்று இந்தப் படத்தைச் சொல்லலாம்.

சண்டக் கோழிப் படத்தில் வரும் அதே ஊர். அந்த ஊரில் உள்ள பேச்சியின் (வரலட்சுமி) கணவனை தகராறில் ஒருவர் கொன்றுவிட அந்தக் குடும்பத்தை முழுவதுமாக அழித்து பழிவாங்கத் துடிக்கிறாள் அவள்.

இதனால் கோவில் திருவிழா 7 ஆண்டுகளாக நடக்காமல் போகிறது. இந்த ஆண்டு அதை நடத்த நினைக்கும் துரை அய்யா (ராஜ்கிரண்), இரு தரப்பிடமும் சமாதானம் பேசித் திருவிழாவை நடக்கத் தொடங்குகிறார்.

வெளிநாட்டிலிருந்து பாலுவும் (விஷால்) அந்தத் திருவிழாவுக்கு வருகிறான். பேச்சி பழிவாங்கத் துடிக்கும் அன்பு என்ற இளைஞனைக் காப்பாற்றுவதாகத் துரை அய்யாவும் பாலுவும் உறுதி ஏற்கிறார்கள். ஊர்த் திருவிழா முழுமையாக நடந்ததா, அன்பு காப்பாற்றப்பட்டானா என்பது மீதிக் கதை.

படம் முழுக்க கதாநாயகனின் வீடு, திருவிழா நடக்கும் பகுதி ஆகிய இரண்டு இடங்களில் தான் நடக்கிறது.

ஆனால், திருவிழா முடியும் வரை அன்புவைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஒற்றை வரிக் கதையைச் சுவாரஸ்யமாக எவ்வளவு நேரம்தான் கொண்டு சொல்ல முடியும்? அன்புவுக்குப் பிரச்சினை வரும்போது வென்று பாலு வந்து காப்பாற்றுகிறார். அல்லது அவரது தந்தை வந்து காப்பாற்றுகிறார். இதுவே படம் நெடுக மாற்றி மாற்றி நடந்து கொண்டே இருக்கிறது.

இதற்கு நடுவில் தமிழ் சினிமாவில் வரும் வழக்கமான கிராமத்துப் பெண்ணாக கீர்த்தி சுரேஷ். சாவித்ரி படத்தில் நடித்துப் பெரும் புகழ் பெற்றவருக்கு, இந்தப் படத்தில் கதாநாயகனைப் பார்த்தவுடன் காதலிக்க வேண்டிய பாத்திரம். முதல் பாதியில் அவர் பேசும் வசனங்களுக்கும் அவரது நடிப்புக்கும் சுத்தமாகப் பொருந்தவில்லை.

எத்தனையோ படங்களில் பார்த்துப் பார்த்து சலித்த காட்சிகள் படம் நெடுக வந்துகொண்டேயிருக்கின்றன.

அதனால், படத்தில் யாராவது சீரியஸாக ஏதாவது சொன்னால், திரையரங்கில் விழுந்து விழுந்து சிரிக்கிறார்கள்.

அதனால், நகைச்சுவைக் கென்று தனியாக யாரும் இல்லை.

கதாநாயகியின் திருமணம் நின்று போக, அருகில் இருக்கும் கரும்பலகையில் "வாரணம் ஆயிரம்" பாடல் எழுதப் பட்டிருப்பது, கணவனை இழந்த வில்லியின் பொட்டு மழை பெய்து அழிவது என குறியீட்டுக் காட்சிகள் வேறு.

பரியேறும் பெருமாள் படத்தில் ஒரே ஒரு காட்சியில் வந்தாலும் வெகுவாகக் கவர்ந்த சண்முகராஜா இந்தப் படத்தில் படம் நெடுக வருகிறார். ஆனாலும் ஒரு காட்சியில்கூட நடிக்க வாய்ப்பில்லை.

இந்த வழக்கமான படத்தில் என்ன செய்ய முடியுமோ அதைச் செய்திருக்கிறார் யுவன் ஷங்கர் ராஜா.

சண்டக் கோழியில் இருந்த புத்துணர்ச்சியும் உற்சாகமும் கச்சிதமான திரைக்கதையையும் எதிர்பார்த்துப் போகிறவர்களுக்குக் கிடைப்பதென்னவோ மிகச் சுமாரான ஓர் அடிதடித் திரைப்படம்தான்.

ந.பரமேஸ்வரன்
parames35@gmail.com

(1505 முதல் 1948 வரையான யாழ்ப் பாணத்தின் வரலாற்றைக் கட்டுரையாளர் இங்கு தொடராகப் பதிவு செய்யவுள்ளார். இங்கு கூறப்பட்டுள்ள தகவல்கள் பெரும் பாலும் ஆங்கில மூலங்களில் இருந்து பெறப்பட்டவை. தகவல்களில் வேறுபாடு காணப்படும் சந்தர்ப்பங்களில் இரண்டு தகவல்களையும் இங்கு தரவுள்ளதாகவும், அவை தொடர்பில் தான் தீர்மானம் எத னையும் எடுக்கவில்லை எனவும் கட்டுரை யாளர் தெரிவித்துள்ளார்.)

நில ஒதுக்கீட்டுக்கான அழுத்தம்

1940இல் யாழ்ப்பாணத்தில் நில ஒதுக்கீட் டுக்கான அழுத்தம் மீண்டும் எழுந் தது. 1638 - 44 வரையான காலப் பகுதியில் மட்டக்களப்பு, திருகோணமலை, காலி, நீர்கொழும்பு கோட்டைகளின் வீழ்ச்சியைத் தொடர்ந்து கணிசமான போர்த்துக்கேயர் இடம்பெயர்ந்து வேறி டங்களில் குடியமரவேண்டிய நிலையேற்பட்டது. 1641இல் மலாக்காவின் வீழ்ச்சி, கணிசமான போர்த் துக்கேய அதிகளை இலங்கைக்கு கொண்டு வந்தது. 1636இல் யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயருக்குக் காணி ஒதுக்குவதில்லையென எடுக்கப்பட்ட தீர்மானம் மீள்பரிசீலனை செய்யப்பட்டது. ஆளுநரின் நீதிமன் றம் (1640 - 45) யாழ்ப்பாணத்தில் கொஞ்சக் காணி களை வழங்க முன்வந்தது. சில காணிகளை குறுகிய கால அடிப்படையிலும், சில காணிகளை நீண்ட கால அடிப்படையிலும்வழங்குவதற்குதீர்மானிக்கப்பட்டது. நீண்டகால அடிப்படையில் வழங்கப்பட்ட காணிகள் டச்சுக்காரர்களின் வருகை மட்டும் இருந்தன.

(1640 -45) இவ்வாறான நில ஒதுக்கீட்டுக்கு போர்த்துக்கேய அதிகாரிகளிடம் இருந்து எதிர்ப்புக் கிளம்பியது. ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் நடை முறைப்படுத்திய நிலக்கொள்கை இறைவரி வருமா னத்தில் நட்டத்தை ஏற்படுத்திய படியால் கோவா நிர்வாகம் இந்த நில ஒதுக்கீட்டை ஏற்றுக்கொள்ள வில்லை. ஏற்றுமதி வரியை யாழ்ப்பாணத்திலிருந்து பெற்றுக்கொள்வது, சிரமமாயிருந்தது. போர்த்துக்கல் அரசர் நில ஒதுக்கீட்டை உடனடியாக நிறுத்துமாறும் ஏற்கனவே ஒதுக்கப்பட்ட நிலங்களை மீளளிக்கு மாறும் உத்தரவிட்டார்.

அரச அறிவுறுத்தலுக்கமைய அரச இறைவரிக்குழு வினால் 1648இல் மேலதிக நிலங்களை ஒதுக்கு வதில்லை என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது. யாழ்ப் பாணத்தில் போர்த்துக்கேயரின் நிலக்கொள்கை இறைவரியைக் குறிக்கோளாகக் கொண்டதாகவேயி ருந்தது. கொள்கை வகுப்பாளர்களான டொம் பிலிப் மஸ்கனேசும் விட்னகாராவும் நிலமும் வருமானத்தை ஈட்டும் ஒரு சாதனம் என்றே கருதினர் பெரியளவில் விடுவிக்கப்பட்ட நிலங்களிலும் சிறிதளவு வருமானத் தையாவது பெற்றுக்கொள்வதையே Seiras, Frietas ஆகியோர் விரும்பினர்.

குடியேற்றம் தொடர்பான விவாதம்

ஆரம்பகட்ட நில ஒதுக்கீடு முடிவடைந்ததும் எவ்வாறான நிலக்கொள்கையை யாழ்ப்பாணத்தில் முன்னெடுப்பது என போர்த்துக்கேயர் யோசித்தனர். ஆளுநரின் நீதிமன்றம் பொருளாதார ரீதியாக அர சியல் ரீதியாகவும் அரச அனுசரணையுடன் போர்த் துக்கேயருக்கு நில ஒதுக்கீடு செய்வதில் எதிர்மறை யான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தது. போர்த் துக்கேயரின் பாவனைக்கு என எடுக்கப்பட்ட காணிகளுக்கு 12வீத வரியை வாடகையாகச் செலுத் துவது இயலாத காரியம் அத்துடன் கோவாவுக்கு மாற்றீடாக யாழ்ப்பாணத்தைப் பாவிப்பது தொடர் பில் கோவா ஒரு நிலைப்பாட்டையும் எடுக்க வில்லை எனவும் ஆளுநர் குறிப்பிட்டார். அத்துடன் அவரிடம் போர்த்துக்கேயர் குடியேற்றவாசிகள் தொடர்பில் ஓர் இழிவான அபிப்பிராயம் இருந்தது. ஒரு குடியேற்ற சூழ்நிலையில் அவர்கள் (போர்த் துக்கேய குடியேற்ற வாசிகள்) உள்ளூர் வாசிகளை அடிமைகளை விட கேவலமாக நடத்தினர் எனவும் அவர் கருதினார்.

(சமர் தொடரும்)

நஞ்சற்ற நாளைக்காக

12

தமிழில் :- புனிதா ராஜேந்திரன்
(ஆலோசகர்– மொழிபெயர்ப்பாளர்
மூலோபாய தொழில்முயற்சி
முகாமைத்துவ நிறுவனம் (SEMA)
ஜனாதிபதி செயலகம்)



உப்பு என்பது சோடியம் குளோரைட் என்றா லும் நாம் அதிலே எந்தவொரு இரசாயனப் பொருளையும் சேர்க்கவில்லை. உப்பு கட லில் நீராகக் காணப்படுகிறது. அதில் வாழும் உயிரினங்களுக்கும் அந்நீரில் நீந்தும் மற்றும் அதனை அருந்தும் எமக்கும் எந்தவொரு பாதிப்பும் இடம்பெற மாட்டாது.

எனினும், நாம் அதே கடல்நீரை ஓரிடத்தில் சேர்த்து செறிவூட்டுகின்ற போது, அச்செறிவு எமக்கு தீங்கிழைக்கக் கூடியது. ஒரு கட்டி உப்பை கைமேல் வைக்கும் போது அதனால்தான் கையில் அரிப்பு ஏற்படுகிறது. இவ்வாறு எந்தவொரு பொருளையும் இரசாயனத் தன்மையானதா, இயற்கையானதா எனத் தீர்மானிக்க முடியும். அதற்கேற்ப ஏதேனுமொரு இர சாயனச் செறிவொன்று மையப்படுத்தப்படுமாயின், அது எமது உயிருள்ள கலங்களைப் போன்றே, நீர் மூலங்களுக்கும் தீங்கேற்படுத்தும் என்பது தெளி வாகிறது. எடுத்துக்காட்டாக பேராசிரியர் திரு. நந்ததாச கோதாகொட தனது ஒளடத விஞ்ஞான உரையை அனைத்து ஒளடத வகைகளும் நச்சுப் பொருட்களே என்ற அறிமுகத்துடன் தான் ஆரம்பித்தார்.

நாம் நோய்களைக் குணமாக்குவதற்காக நிபுணத் துவம் அறிவுக்கமைய அவற்றை ஒரு குறிப்பிட்ட அளவில் பரிந்துரைப்புக்கு ஏற்ப, பாவித்து, அதனை பொதுவான உயிரியற் செயற்பாட்டுக்கு பரிவர்த் தனை செய்தே இந்நச்சுக்களைப் பாவிக்கிறோம். ஏதேனுமொரு நோயின் போது எமது இரத்த நாளங்களில் மருந்துகள் மற்றும் சேலைன் உட் செலுத்தப்பட்டு போசணை வழங்கப்பட்டாலும் அதுஎமதுநிரந்தரபோசாக்குவிதிமுறையாகிவிடாது. எமக்கு சாதாரண நிலையை அடைந்ததும் வாய்மூலம் உணவை உண்ணுமாறு வைத்தியர் பரிந்துரைப்பார். தாவரமொன்றுக்கு அதன் வேர்த் தொகுதியின் ஊடாக உரிய போசணையைப் பெற்றுக் கொள்ளும் ஆற்றலைப் பெற்றுத் தருவது இவ்வாறு வாயினால் உணவை உண்பதை ஒத்ததாக அமைவதுடன், இவ்விஞ்ஞானரீதியான சித்தாந்தம் இலங்கையின் இயற்கை விவசாயத்தின் அடிப்படையாகும்.

இரசாயன விவசாயம் எமது வாழ்க்கைக்கும் சுற்றாடலுக்கும் செய்கின்ற தீர்க்க முடியாத இப் பாரிய அழிவுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமெனில், சூரியன் உச்சத்திலுள்ள விவசாய நாடாக கட்டாயமாக நாம் இவ்வுயிரியல் பிறப்பாக்கச் செயற்பாட்டை ஆரம்பிக்க நேரிடும். அங்கு நுண்ணுயிர்கள் தமது வாழ்க்கைச் சக்கரத்தை ஆரம்பித்த பின்னர் அவர்களில் தங்கியிருக்கும் ஏனைய உயிர்கள் படிப்படியாக தோன்றத் தொடங் குவதால் இயற்கை, சுற்றாடல் மற்றும் மண்ணுக் கிடையேயான தொடர்பு மீண்டும் செயற்படத் தொடங்கும்.

இந்த செயற்கை விவசாயத் தொழில்நுட்பம் இலங்கையில் பல்லாயிரம் வருடங்களாக யுகம் யுகமாகப் படிப்படியாக வளர்ந்து வந்துள்ளது என்பது தெளி வாவதுடன் பல ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் அது பாரிய அளவிலான வளர்ச்சியைக் பெற்றுள்ளது என்பதும் தெளிவாகிறது. அவ்வாறே ஒருசில விவசாயக் குடிகள் இத்தொழல்நுட்பத்தை மிகுந்த சிரமத்துடன் இதுவரை காப்பாற்றி வந்துள்ளனர் என்பதும் தெளிவாகிறது. ஏதேனுமொரு குறிப்பிட்ட காலப் பகுதியில் நாம் முன்னர் குறிப்பிட்ட மூன்றுவித மூலங்களின் ஊடாக ஏனைய நாடுகளில் பொருத்தமான விவசாய தொழில்நுட்ப விதி முறைகளும் அதில் உள்வாங்கப்பட்டிருந்தாலும் பல ஆயிரம் ஆண்டுகளாக இலங்கையில் காணப்பட்ட கமத்தொழிலுக்கும், நீர்ப்பாசனத்துக்கும் குளக் கட் டமைப்புக்களுக்கே அதற்குரிய கௌரவம் உரித் தாகும். இலங்கை இவ்விவசாய தொழில்நுட்பத்தை முன்மாதிரியாக பெருமையுடன் உலகுக்கு அறி முகப்படுத்தலாம்.

(முற்றும்)

சிறிலங்கா இன்சூரன்ஸின் 152 ஆவது கிளை சூவன்வெலவில் கடந்த 15ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் நிறுவனத்தின் தலைவர் ஹேமக அமர சூரிய, பிரதம நிர்வாக அதிகாரி சந்தன எல். அலுத்கம உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

Health Camp For Journalists

The Ministry of Health, Nutrition and indigenous Medicine is planning to conduct a special Health Camp for journalists.You are cordially invited to use this opportunity to get yourself tested for diseases.

Following services will be provided at the Health Camp conducted on 5,6 & 7 at Sri Lanka Foundation

- Testing for Body Mass Index, Diabete, hypertension, cardiac diseases, renal diseases
- Nutrition advice clinic
- Physical activity guidance
- Indvidual consultation with a specialist for needy persons.
- Dental checkup and treatment

Instructions to participants at the special Health Camp.

1. Everyone must participate in a dress suitable to pracitice physical exercise
2. Please bring your jounrlaist identity card with you
3. The health camp with start at 7.30 am.
4. Everyone will be registerd and be issued a personal health record.
5. Blood sample, urine samples will be taken at 8 am
6. All the participants must come after fasting (not even water) since 10 pm of the previous day.
7. Breakfast will be provided after obtaining blood samples
8. The clinical examination will be conducted after breakfast.
9. Persons will be referred to Nutrition advise clinic, physical activity guidance, dental checkup and treatment and individual consultancy after the clinical examination.
10. Further referral will be made for treatment, advanced investigations or further consulataion with a specialist.
11. Lunch will be provided after the consultations

Dr. Sujatha Senaratne
Consultant i Medical Administration,
Private Secretary to the Hon. Minister oh Health, Nutrition and Indigenous Medicine.

05 ☐, 06 ☐, 07 ☐

1. මාධ්‍ය ආයතනය	-			
2. නම	-			
3. ජා. හැ. අ	-		4. උපන් දිනය	DD / MM / YYYY
5. ලිපිනය	-			
6. දුරකථන අංකය	-	ස්ථාවර	ජංගම	
7. මාධ්‍ය ආයතනය	-			
8. වැසුනේ ලිපිනය	-			

இப்பத்திரிகை மாளிப்பாய் வீதி, உடுவில் என்ற முகவரியிலுள்ள அம்பலம் பதிப்பகத்தால், 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 06.11.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.